Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ


தொகுதி
2

வருடாந்திர
சந்தா
ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly
BADAR Qadian
TAMIL

இதழ்
42

ஆசிரியர்
முஸ்ஸம்மில்
அஹ்மது

துணை
ஆசிரியர்
ரஃபீக்
அஹ்மது

28 முஹர்ரம் 1439 ஹிஜ்ரி கமரி 19 அஹா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
19 அக்டோபர் 2017


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அத்தகைய ஆயிரக்கணக்கான மனிதர்களை இறைவன் உருவாக்கியுள்ளான். அவர்களது உள்ளங்களில் அவன் எனது நேசத்தை நிறைத்து விட்டான். அவர்களில் சிலர், எனக்காக உயிரைத் தந்து விட்டனர். அவர்களில் சிலர், தங்களது பொருள் அழிந்து போவதை எனக்காக ஏற்றுக் கொண்டனர். அவர்களில் சிலர், எனக்காக தங்கள் நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள், துக்கங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். மேலும், அத்தகைய ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் தேவைகளுக்கு எதிரில் எனக்கு முன்னுரிமை வழங்கியவாறு தங்களது பிரியமான செல்வத்தை எனக்கு முன்னால் வைத்து விட்டனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**எழுபத்தி ஒன்றாவது அடையாளத்தின் மீதமுள்ள பகுதி:** சியால்கோட்டைச் சார்ந்த ஸய்யிது ஹாமிது ஷா சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: சியால்கோட்டைச் சார்ந்த ஹாஃபிஸ் சுல்தான், ஹுஸூர் அவர்களின் கடுமையான எதிரியாக இருந்தார். சியால்கோட்டில், தாங்கள் சவாரியில் ஓர் இடத்தைக் கடந்து செல்லும் வேளையில் இவர் உங்கள் மீது சாம்பலைப் போட எண்ணிய அதே நபராவார். இறுதியில் கடுமையான பிளேக் நோயின் பாதிப்பால் 1906 -ல் அழிந்து போனார். அவரது குடும்பத்தைச் சார்ந்த ஒன்பது அல்லது பத்து பேர்கூட பிளேக் நோயால் அழிந்து விட்டனர்.

அவ்வாறே ஹகீம் முஹம்மது ஷஃபீஹ் என்பவர் பைஅத் செய்து விட்டு முர்தத் ஆகி விட்டார் என்பது சியால்கோட் நகரிலுள்ள அனைவருக்கும் தெரியும். அவர் மத்ரஸத்துல் குர்ஆனிற்கான அடித்தளத்தை நிறுவினார். அவர் தங்களது கடுமையான எதிரியாக இருந்தார். இந்த துர்பாக்கியசாலிக்கு, தனது சுய நோக்கங்களின் காரணமாக பைஅத்தில் நிலைத்திருக்க முடியவில்லை. சியால்கோட்டிலுள்ள லோபாரான் முஹல்லாவைச் சார்ந்த மக்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் கடுமையான எதிரிகளாக இருந்தனர். பகைமையிலும், எதிர்ப்பதிலும் இவர் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். இறுதியில், அவரும்கூட பிளேக்கிற்கு இரையாகி விட்டார். அவரது மனைவி, அவரது தாயார், அவரது சகோதரர் ஆகிய அனைவருமே ஒருவர் பின் ஒருவராக பிளேக் நோயால் மரணித்து விட்டனர். அவரது மத்ரஸாவிற்கு எவர்கள் பொருளுதவி செய்து வந்தனரோ அவர்களும் அழிந்து விட்டனர்.

அவ்வாறே சியால்கோட்டைச் சார்ந்த மிர்ஸா சர்தார் பேக் என்பவர் தீய சொற்களை நாவில் கூறுவதிலும், தரக்குறைவாகப் பேசுவதிலும் அதிகமாக ஈடுபட்டு வந்தார். எல்லா நேரமும் எள்ளி நகையாடுவதும் பரிகாசம் செய்வதும் அவரது பணியாக இருந்தது. குத்திக்காட்டும் விதமாகவும் இழிவாகவும் ஒவ்வொரு விஷயத்தையும் ஆணவத்துடன் அவர் பேசி வந்தார். அவரும் கடுமையான பிளேக் நோயால் பீடிக்கப்பட்டு அழிந்து போனார். ஒருநாள் அவர் ஆணவத்துடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு நபரிடம் ஏன் பிளேக் பிளேக் என்று கூறுகின்றீர்கள்? எங்களுக்கு பிளேக் நோய் வந்தால்தான் அதுபற்றி நாங்கள் தெரிந்து கொள்வோம் என்று கூறினார். இவ்வாறு அவர் கூறி இரண்டு நாட்கள் கழிந்த பிறகு அவர் பிளேக் நோயால் மரணித்து விட்டார்.

**எழுபத்தி இரண்டாவது அடையாளம்:** சில கடுமையான எதிரிகள் முபாஹலாவின் வடிவில் லஃனத்துல்லாஹி அலல் காதிபீன் (பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக) என்று கூறினர். பிறகு அவர்கள் இறை தண்டனைக்கு ஆளாகி மரணித்தனர். உதாரணமாக, மவ்லவி ரஷீது அஹ்மது கங்கோயி முதலில் பார்வையை இழந்தார். பிறகு பாம்பு கடித்ததனால் அவர் மரணமடைந்தார். சிலர் பைத்தியக்காரர்களாக ஆகி மரணித்தனர். உதாரணமாக, லூதியானாவைச் சார்ந்த மவ்லவி ஷாஹ் தீன் இவ்வாறே மரணித்தார். எதிர்ப்பதில் முன்னனியில் இருந்து வந்த மவ்லவி அப்துல் அஸீஸ், மவ்லவி முஹம்மது, லூதியானாவைச் சார்ந்த மவ்லவி அப்துல்லாஹ் ஆகிய மூவரும் மரணித்து விட்டனர். அவ்வாறே பொய்யர் மீது இறைவனின் தண்டனை இறங்கும் என்று தனக்கு இல்ஹாம் வந்ததாக கூறிய லகுகேவைச் சார்ந்த அப்துர் ரஹ்மான் முஹியுத்தீன் என்பவர், அவ்வாறு அவர் கூறிய பிறகு மரணித்து விட்டார்.

**எழுபத்தி மூன்றாவது அடையாளம்:** இவ்வாறே குஸீரைச் சார்ந்த மவ்லவி குலாம் தஸ்தகீர் என்பவர் தன் தரப்பிலிருந்து என்னுடன் முபாஹலா செய்தார். மேலும், தனது நூலில் எவர் பொய்யராக இருக்கின்றாரோ இறைவன் அவரை அழித்து விடுவானாக என்று துஆ செய்து எழுதியிருந்தார். பிறகு இவ்வாறு துஆ செய்து சில நாட்கள் கழிந்த பிறகு அவர் அழிந்து விட்டார். எதிரிகளாக இருக்கக்கூடிய மவ்லவிகள் புரிந்து கொள்வதாக இருந்தால் இது எத்தகைய அடையாளமாக இருந்தது?

**எழுபத்தி நான்காவது அடையாளம்:** இவ்வாறே பேஸைச் சார்ந்த மவ்லவி முஹம்மது ஹஸனும் எனது முன்னறிவிப்பிற்கு ஏற்ப மரணித்து விட்டார். இது பற்றி விரிவாக நான் எனது நூலான மவாஹிப்புர் ரஹ்மானில் எழுதியுள்ளேன்.

**எழுபத்தி ஐந்தவாது அடையாளம்:** நான் எனது நூலான 'நூருல் ஹக்' -ன் பக்கம் *35* முதல் *38* வரை இந்த முன்னறிவிப்பை இவ்வாறு

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நீங்களோ இஸ்லாத்தின் அமைதி மிகுந்த போதனை பற்றி பேசுகின்றீர்கள். ஆனால், முஸ்லிம்களில் பெரும்பான்மை அவ்விஷயங்களைப் பேசுவதுமில்லை. உங்களை அவர்கள் முஸ்லிம்களாகக் கருதுவதுமில்லை. மற்றவர்களோடு ஒப்பிடும்போது அஹ்மதிகளின் எண்ணிக்கையோ மிகவும் குறைவாக உள்ளது. இந்நிலையில் அஹ்மதி எவ்வாறு இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி நடப்பதாக வாதிட முடியும்? மேலும் மற்ற முஸ்லிம்கள் இந்த போதனையின்படி செயல்படுவதற்காக அவர்களை எப்படி ஏற்றுக் கொள்ளச் செய்வீர்கள்? என இன்றைய நாட்களில் மேற்கத்திய பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் கேள்கி கேட்கின்றன.

நாம் கூறுகின்ற இஸ்லாத்தின் போதனைகளை திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் சுன்னத்திலிருந்து நாம் நிரூபிக்கின்றோம். கற்பனையான எதனையும் பேசுவதில்லை. இதுவே நமது பதிலாகும். இஸ்லாத்தின் போதனை தீவிரவாத போதனைகள் ஒருபோதும் அல்ல என மற்றவர்களை தாக்கத்திற்குள்ளாக்க நாம் எதனையும் கூறவில்லை அல்லது இன்றைய கால சூழலைக் கண்டு நாம் இதனை நமது நிலைப்பாடாக மேற்கொள்ளவில்லை. அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை வழங்குதல் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதல் ஆகியவையே எப்போதும் இஸ்லாத்தின் போதனையாக இருந்துள்ளது என்பதை நாம் நிரூபிக்கின்றோம்.

நீங்கள் இந்த போதனையை மற்ற முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள என்ன செய்வீர்கள்? என்ற கேள்விக்குரிய பதில் இதுவாகும். முஸ்லிம்களின் சீர்கெட்ட நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி தோன்றுவார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளார்கள். அன்னார் முஸ்லிம்களையும் சீர்படுத்துவார். மற்ற மக்களையும் சீர்படுத்துவார். அன்னார் இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகில் பரப்புவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு மிகவும் மகிமையுடன் நிறைவேறியது. ஆக, இந்நிலைகளில் அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியை அனுப்பினான். அன்னார் தோன்றி இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளின் அறிவை நமக்கு வழங்கினார்கள். இஸ்லாமிய கட்டளைகளின் அனைத்து நுட்பமான ஞானங்களையும் எடுத்துரைத்தார்கள். அஹ்மதி முஸ்லிம்களாகிய நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம். எனவே, அந்த வகையில் இஸ்லாத்தின் போதனைகளை நாம் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் எடுத்துரைத்து வருகிறோம். தப்லீக் செய்வதே நமது பணியாகும். பிரச்சாரம் செய்வதே நமது பணியாகும். அதனை நாம் செய்து வருகிறோம்; செய்து கொண்டிருப்போம் - இன்ஷா அல்லாஹ்.

இந்த போதனையை ஏனைய முஸ்லிம்களை எவ்வாறு ஏற்றுக் கொள்ள வைப்பீர்கள்? என நம்மிடம் கேட்கின்றனர். அவர்களிடம் நாம் இவ்வாறு கூற வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத் தற்போது கோடிக்கணக்கான மக்களிடம் பரவியுள்ளது. இதன் பெரும்பான்மை முஸ்லிம்களின் ஏனைய பிரிவுகளிலிருந்து வந்துதான் அஹ்மதிய்யத்தில் இணைந்துள்ளது. மக்களுக்கு உண்மையான போதனை வெளிப்படும்போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உண்மைத்துவம் வெளிப்பட்டுக் கொண்டு செல்லச் செல்ல ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் முன்னறிவிப்புகளை மக்கள் ஒப்புக் கொள்கின்றனர். முஸ்லிம்களிலிருந்தும் பலர் நம்முடன் இணைந்து விட்டனர். ஏனைய மார்க்கத்தைச் சார்ந்த மக்களும் ஜமாஅத்தில் இணைந்து கொண்டே இருக்கின்றனர். ஒருநாள் இந்த சிறுபான்மை பெரும்பான்மையாக மாறிவிடும் - இன்ஷா அல்லாஹ். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். மேலும், அதற்கான உதாரணங்களை தினமும் நாம் கண்டு வருகிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கில் ஜமாஅத்தில் மக்கள் இணைந்து வருகின்றனர். அதில் பெரும்பான்மை முஸ்லிம்களிலிருந்தே இணைகின்றனர். நம்மிடம் வசதி வாய்ப்புகளும் காரணிகளும் முபல்லிக்மார்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக இருந்த போதிலும் அல்லாஹ் அசாதாரண விளைவை உருவாக்குகின்றான். இன்னும் சொல்வதென்றால், ஜமாஅத்தில் இணைகின்ற பலருக்கும் அல்லாஹ்வே நேரடியாக வழிகாட்டுகின்றான். பலர் நல்ல கனவுகள் கண்டு ஜமாஅத்தில் இணைகின்றனர். கனவுகள் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைப் பற்றியும் ஜமாஅத்தைப் பற்றியும் அறிமுகம் ஏற்பட்டு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றிய உண்மை வெளிப்பட்டு அதன் மூலம் ஜமாஅத்தில் பலர் இணைந்துள்ளனர். சிலர் ஜமாஅத்தை ஏற்கனவே அறிந்து இஸ்திகாராவும் செய்கின்றனர். பின்னர் அல்லாஹ்வின் வழிகாட்டுதலினால் ஜமாஅத்தில் இணைந்து விடுகின்றனர். வேறு சிலரோ தப்லீகை செவிமடுக்கின்றனர். முபல்லிக்மார்களும், முஅல்லிம்களும் சிறப்பு தப்லீக் அழைப்பாளர்களும் இந்த பணியில் பங்கு பெறுகின்றனர். இதை தவிர ரேடியோ, தொலைக்காட்சி சேனல்கள் மூலமாக நமது தூதுச்செய்தியை செவிமடுக்கச் செய்து, அல்லாஹ் அவர்களின் உள்ளங்களைத் திறந்து கொடுக்கின்றான். வேறு சிலர் இருக்கின்றனர். அவர்கள் ஜமாஅத்தின் எதிரிகளின் எதிர்ப்பு மற்றும் அந்த எதிரிகளின் முடிவுகளைக் கண்டு ஜமாஅத்தை ஒப்புக் கொள்கின்றனர். வேறு சிலருக்கு அல்லாஹ் அடையாளங்களைக் காட்டித் தருகின்றான்.

கனவுகள் மூலமாக அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அஹ்மதிய்யத்தின் உண்மையின் பக்கம் வழிகாட்டல் கிடைத்திருப்பது தொடர்பான பல்வேறு சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் ஈமானுக்கு எழுச்சியூட்டும் விதத்தில் எடுத்துக் கூறியுள்ளார்கள். சில நேரங்களில் சில அடையாளங்கள் மக்களுக்கு நேர்வழி கிடைப்பதற்கும் அவர்கள் பைஅத் செய்வதற்குரிம் உரிய வழியாக ஆகி விடுகின்றது. சில நேரங்களில் சுயமே எதிர்கள்கூட நல்லியல்புள்ள மக்களுக்கு உண்மையை ஆராய்வதற்கான வழிகளைத் திறந்து தருகின்றனர். பல்வேறு நாடுகளுடன் தொடர்புடைய இதுபோன்ற ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அல்லாஹ் இஸ்லாத்தின் உண்மையான போதனையின் பக்கம் மக்களைக் கொண்டு வருகிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மூலமாகவே ஒருநாள் உண்மை இஸ்லாம் உலகின் மீது மேலோங்கி நிற்கும் - இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அவர்கள் இந்த அருளில் பங்கு பெறுவதற்காக நிரந்தரமாக தப்லீக் செய்பவர்களாகத் திகழ்வார்களாக. மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக இருப்பார்களாக.

---

காதியானைச் சார்ந்த தர்வேஷ் மர்ஹூம் மன்சூர் அஹ்மது சாஹிப் கனோக்கே அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய குர்ஷிது ருசிய்யா சாஹிபா மற்றும் அமெரிக்காவிலுள்ள நியூ ஜெர்ஸியைச் சார்ந்த டாக்டர் சலாஹுத்தீன் சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**15 செப்டம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **15 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ ۔ إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِينُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ ۔

**اُدْعُ إِلٰى سَبِيلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِي هِيَ أَحْسَنُ ۚ**
**إِنَّ رَبَّكَ هُوَ أَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيلِهِ وَهُوَ أَعْلَمُ بِالْمُهْتَدِينَ**

நீங்களோ இஸ்லாத்தின் அமைதி மிகுந்த போதனை பற்றி பேசுகின்றீர்கள். ஆனால் முஸ்லிம்களில் பெரும்பான்மை அவ்விஷயங்களைப் பேசுவதுமில்லை. உங்களை அவர்கள் முஸ்லிம்களாக கருதுவதுமில்லை. மற்றவர்களோடு ஒப்பிடும்போது அஹ்மதிகளின் எண்ணிக்கையோ மிகவும் குறைவாக உள்ளது. இந்நிலையில் அஹ்மதி எவ்வாறு இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி நடப்பதாக வாதிட முடியும்? மேலும் மற்ற முஸ்லிம்கள் இந்த போதனையின்படி செயல்படுவதற்காக அவர்களை எப்படி ஏற்றுக் கொள்ளச் செய்வீர்கள்? என இன்றைய நாட்களில் மேற்கத்திய பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் கேள்கி கேட்கின்றன. கடந்த சுற்றுப் பயணத்தின்போது ஜெர்மனியிலும் இதே கேள்வியை என்னிடம் கேட்டனர்.

நாம் கூறுகின்ற இஸ்லாத்தின் போதனைகளை திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் சுன்னத்திலிருந்து நாம் நிரூபிக்கின்றோம். கற்பனையான எதனையும் பேசுவதில்லை. இதுவே நமது பதிலாகும். இஸ்லாத்தின் போதனை தீவிரவாத போதனைகள் ஒருபோதும் அல்ல என மற்றவர்களை தாக்கத்திற்குள்ளாக்க நாம் எதனையும் கூறவில்லை அல்லது இன்றைய கால சூழலைக் கண்டு நாம் இதனை நமது நிலைப்பாடாக மேற்கொள்ளவில்லை. அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை வழங்குதல் அவனது அடியார்களுக்–குரிய உரிமைகளை வழங்குவதல் ஆகியவையே எப்போதும் இஸ்லாத்தின் போதனையாக இருந்துள்ளது என்பதை நாம் நிரூபிக்கின்றோம். நீங்கள் இந்த போதனையை மற்ற முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள என்ன செய்வீர்கள்? என்ற கேள்விக்குரிய பதில் இதுவாகும்.

முஸ்லிம்களின் சீர்கெட்ட நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்–பட்ட மஹ்தி தோன்றுவார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளார்கள். அன்னார் முஸ்லிம்களையும் சீர்படுத்துவார். மற்ற மக்களையும் சீர்படுத்துவார். அன்னார் இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகில் பரப்புவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு மிகவும் மகிமையுடன் நிறைவேறியது. ஆக, இந்நிலைகளில் அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியை அனுப்பினான். அன்னார் தோன்றி இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளின் அறிவை நமக்கு வழங்கினார்கள். இஸ்லாமிய கட்டளைகளின் அனைத்து நுட்பமான ஞானங்களையும் எடுத்துரைத்தார்கள். அஹ்மதி முஸ்லிம்களாகிய நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம். எனவே, அந்த வகையில் இஸ்லாத்தின் போதனைகளை நாம் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் எடுத்துரைத்து வருகிறோம். தப்லீக் செய்வதே நமது பணியாகும். பிரச்சாரம் செய்வதே நமது பணியாகும். அதனை நாம் செய்து வருகிறோம். செய்து கொண்டிருப்போம் – இன்ஷா அல்லாஹ். இறை அமைப்பு மற்றும் நபிமார்களின் ஜமாஅத் ஒரு சில நாட்களில் வளர்ச்சி அடைந்து விடுவதில்லை. மாறாக, கொஞ்சம் கொஞ்சமாகவே அது பரவுகிறது; வளர்கிறது.

இந்த போதனையை ஏனைய முஸ்லிம்களை எவ்வாறு ஏற்றுக் கொள்ள வைப்பீர்கள்? என நம்மிடம் கேட்கின்றனர். அவர்களிடம் நாம் இவ்வாறு கூற வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத் தற்போது கோடிக்கணக்கான மக்களிடம் பரவியுள்ளது. இதன் பெரும்பான்மை முஸ்லிம்களின் ஏனைய பிரிவுகளிலிருந்து வந்துதான் அஹ்மதிய்யத்தில் இணைந்துள்ளது. மக்களுக்கு உண்மையான போதனை வெளிப்படும்போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவம் வெளிப்பட்டுக் கொண்டு செல்லச் செல்ல ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் முன்னறிவிப்புகளை மக்கள் ஒப்புக் கொள்கின்றனர். முஸ்லிம்களிலிருந்தும் பலர் நம்முடன் இணைந்து விட்டனர். ஏனைய மார்க்கத்தைச் சார்ந்த மக்களும் ஜமாஅத்தில் இணைந்து கொண்டே இருக்கின்றனர். ஒரு நாள் இந்த சிறுபான்மை பெரும்பான்மையாக மாறிவிடும் – இன்ஷா அல்லாஹ். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

மேலும், அதற்கான உதாரணங்களை தினமும் நாம் கண்டு வருகிறோம். ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கில் ஜமாஅத்தில் மக்கள் இணைந்து வருகின்றனர். அதில் பெரும்பான்மை முஸ்லிம்களிலிருந்தே இணைகின்றனர். நம்மிடம் வசதி வாய்ப்புகளும் காரணிகளும் முபல்லிக்மார்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக இருந்த போதிலும் அல்லாஹ் அசாதாரண விளைவை உருவாக்குகின்றான். இன்னும் சொல்வதென்றால், ஜமாஅத்தில் இணைகின்ற பலருக்கும் அல்லாஹ்வே நேரடியாக வழிகாட்டுகின்றான். பலர் நல்ல கனவுகள் கண்டு ஜமாஅத்தில் இணைகின்றனர். கனவுகள் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றியும் ஜமாஅத்தை பற்றியும் அறிமுகம் ஏற்பட்டு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றிய உண்மை வெளிப்பட்டு அதன் மூலம் ஜமாஅத்தில் பலர் இணைந்துள்ளனர். ஒரு சிலர் இளமைப் பருவத்தில் அல்லது நீண்ட காலத்திற்கு முன் கனவு கண்டிருப்பர். ஆனால் ஏதாவது ஒரு காரணத்தில் பின்னர் அவர்களுக்கு அந்த கனவு நினைவிற்கு வந்து பைஅத்தும் செய்து விடுகின்றனர். சிலர் ஜமாஅத்தை ஏற்கனவே அறிந்து இஸ்திகாராவும் செய்கின்றனர். பின்னர் அல்லாஹ்வின் வழிகாட்டுதலினால் ஜமாஅத்தில் இணைந்து விடுகின்றனர். வேறு சிலரோ தப்லீகை செவிமடுக்கின்றனர். முபல்லிக்மார்களும், முஅல்லிம்களும் சிறப்பு தப்லீக் அழைப்பாளர்களும் இந்த பணியில் பங்கு பெறுகின்றனர். இதை தவிர ரேடியோ, தொலைக்காட்சி சேனல்கள் மூலமாக நமது தூதுச்செய்தியை செவிமடுக்கச் செய்து அல்லாஹ் அவர்களின் உள்ளங்களைத் திறந்து கொடுக்கின்றான். வேறு சிலர் இருக்கின்றனர். அவர்கள் ஜமாஅத்தின் எதிரிகளின் எதிர்ப்பு மற்றும் அந்த எதிரிகளின் முடிவுகளைக் கண்டு ஜமாஅத்தை ஒப்புக் கொள்கின்றனர். வேறு சிலருக்கு அல்லாஹ் அடையாளங்களைக் காட்டித் தருகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நான் உமக்கு கண்ணியம் அளிப்பேன். மேலும் அதிகரிக்கச் செய்வேன் என அல்லாஹ் கூறினான்.

1883 –ல் ஜமாஅத் முறையாக நிறுவப்படுவதற்கு முன்னரே அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்திக்கான எந்த வாதமும் செய்யாதபோது அன்னாரை குறைவான மக்களே அறிந்திருந்தபோது அல்லாஹ் كَتَبَ اللّٰهُ لَأَغْلِبَنَّ أَنَا وَرُسُلِي ‘நானும் எமது தூதருமே நிச்சயமாக வெற்றி பெறுவோம்’ என்பதை நான் எழுதி விட்டேன் என அல்லாஹ் அன்னாரிடம் கூறினான். அப்போது அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்திக்கான வாதம் கூட செய்திருக்கவில்லை. பின்னர் لَا مُبَدِّلَ لِكَلِمَاتِهِ அதாவது, அல்லாஹ்வின் கூற்றை மாற்றக் கூடியவர் எவரும் இல்லை என அல்லாஹ் கூறினான். அன்னாரது ஜமாஅத் அதிகரிக்கும்; பரவும்.

ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் தொடர்பாக இன்னும் ஏராளமான பல முன்னறிவிப்புகள் உள்ளன. நான் உமக்கு முன்னேற்றத்தை வழங்குவேன்; அதிகரிக்கச் செய்வேன். உன்னை நேசிப்பவர்களின் கூட்டத்தை அதிகரிக்கச் செய்வேன் என அல்லாஹ் அன்னாரிடம் முன்னேற்றத்திற்குரிய வாக்குறுதியை வழங்கி இருந்தான். அந்த ஒரு தனி மனிதரின் ஜமாஅத் இன்று முழு உலகிலும் பரவி விட்டது. அனுதினமும் பரவிக் கொண்டே வருகிறது. புதிய புதிய மக்கள் அனுதினமும் இதில் இணைந்து வருகின்றனர். இந்த ஜமாஅத்தில் இணையக்கூடிய மக்களுக்கு அல்லாஹ் எவ்வாறு வழியைத் திறக்கின்றான்? எவ்வாறு வழிகாட்டுகின்றான்? என்பதற்கு சான்றாக சில சம்பவங்களை நான் தற்போது எடுத்து வைப்பேன். கனவுகளின் மூலமாக அஹ்மதியத்தை ஒப்புக் கொண்ட பலரின் சம்பவங்கள் உள்ளன.

காஸான் என்ற நகரிலிருந்து நமது ஜமாஅத்தின் முபல்லிக் எழுதுகின்றார்: சன்த்

ஷஃபீலோயிஸ் என்ற ஒரு நண்பருடன் தப்லீக் தொடர்பு ஏற்பட்டது. அன்னாருடன் கேள்வி பதில் நிகழ்ச்சிகளும் நடந்து வந்தன. சிறிது காலத்திற்குப் பிறகு அன்னார் பைஅத் செய்து விட்டார். பைஅத்தின் சம்பவத்தை எடுத்துரைத்த –வாறு அன்னார் கூறுகின்றார். அல்லாஹ் கனவில் எனக்கு அறிவித்துக் கொடுத்தான். நான் சிரியாவின் பகுதியில் இருக்கிறேன். இரு பிரிவினர் தங்களுக்குள் சண்டையிடுகின்றனர். அவர்களின் சண்டைக்கிடையில் மூன்றாவது ஒரு கூட்டம், பிரிவு வருகின்றது. நீங்கள் ஒருவர் மற்றவரை கொலை செய்து அநீதியிழைக் –கின்றீர்கள் என அவர்கள் இருவருக்கும் அந்த கூட்டம் புரிய வைக்கின்றது. இந்த சண்டையை முடித்து கொண்டு உங்களுக்கிடையே சமாதானம் செய்து கொள்ளுங்கள் எனக் கூறுகின்றது. அந்த மூன்றாவது பிரிவினரின் வழிகாட்டுதலுக்கேற்ப சண்டையிட்ட இரு பிரிவினரும் ஆயுதங்களை வீசி விட்டு தங்களுக்குள் சமாதானம் செய்து கொள்கின்றனர். இவ்விருவருக்கும் சமாதானத்தை ஏற்படுத்திய அந்த மூன்றாவது பிரிவு எது? என கனவில் கேட்கிறேன். அப்போது அந்த கூட்டம் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆகும் என்று எனக்கு கூறப்படுகிறது. அதே போன்று மற்றுமொரு கனவு ஒன்றை அல்லாஹ் எனக்கு காட்டினான். மழைக்காலமாக இருந்தது. காற்று வேகமாக வீசியது. அப்போது அஹ்மதிய்யத்தின் கொள்கையே சரியானது என எனக்கு (கனவில்) சப்தம் வந்தது. இந்த கனவிற்குப் பிறகு நான் பைஅத் செய்து விட்டேன் என அவர் கூறுகின்றனர்.

ஃபிரான்ஸிலிருந்து மாலிகா சாஹிபா என்ற ஒரு பெண்மணி எழுதுகின்றார்: தான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தைக் கூறியவாறு அன்னார் எழுதுகின்றார். எங்களுடைய முழு குடும்பத்திலும் அஹ்மதிய்யதைப் பற்றி பேச்சு நடந்து வந்தது. இன்ன நபருக்கு கனவில் மூலமாக அல்லாஹ் வழிகாட்டினான். அவர் ஜமாஅத்தில் இணைந்து விட்டார் போன்ற செய்திகளையெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் நான் சுயம் ஒருபோதும் எதனையும் பேசவில்லை. ஒருநாள் நான் இறைவனிடம் துஆ செய்தேன். இறைவா! அஹ்மதிய்யத் நேர்வழியா? அல்லது தவறான வழியா? என எனக்கும் கூறுவாயாக என துஆ செய்தேன். அடுத்த மூன்று இரவுகளில் அல்லாஹ் தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக மூன்று கனவுகளைக் காட்டினான் என்று கூறுகிறார். முதல் கனவில் நான் கண்டேன். எல்லா புறமும் பதட்டம் தொற்றிக் கொண்டது. கியாமத் வந்து விட்டது போல் இருக்கின்றது. ஆனால் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட எனது சகோதர சகோதரிகள் நிம்மதியாக மகிழ்ச்சியாக உள்ளனர். அவர்களிடம் எந்த பதட்டமில்லை. மகிழ்ச்சியாக உள்ளனர். ஆனால் நானோ பரிதவித்து நிற்கிறேன். நிலைமை மோசமாக உள்ளது. நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கூட்டத்திற்குச் செல்ல உள்ளோம் என (எங்களிடம்) கூறுகின்றனர். நாங்கள் கனவிலேயே அச்சத்தின் நிலையில் இருக்கிறோம். நாங்கள் ஓடிச் சென்று அவர்களைக் கட்டி அணைத்துக் கொள்கிறோம்.

இன்னுமொரு கனவு ஒன்றை நான் கண்டேன். அதில் எனது அஹ்மதி சகோதரி என்னிடம் தொழுவீராக. இந்த ஒரு வழிதான் உள்ளது என கூறுகின்றார். இதே போன்று மூன்றாவது இரவு நான் எனது சகோதர சகோதரிகளுடன் அமர்ந்திருப்பதாக கனவில் காண்கிறேன். எனது கையில் அல்லாஹ் ஏதோ எழுதியிருப்பதைப் போன்று நான் உணர்ந்தேன். இந்த கனவுகளுக்குப் பிறகு எனது உள்ளத்தில் தெளிவு ஏற்பட்டது. இது ஜமாஅத்தின் உண்மையைப் பற்றிய கனவுகள்தான் என்பதையும் உணர்ந்தேன். பின்னர் பைஅத்தும் செய்து விட்டேன். தற்போது எனது முழு குடும்பமும் அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டது.

ஐவரிகோஸ்டின் ஒரு கிராமம் Cheipo –வில் தொண்டிற்கான பாக்கியம் பெற்று வரும் அப்துல் அஸீஸ் தராவடே சாஹிப் கூறுகின்றார்கள்: வமாரா தராவடே சாஹிப் என்ற வயதான ஒரு நபர் கனவில் கண்டார். அவருடைய கிராமத்திற்கு கனவில் அரபு மக்கள் வருகின்றனர். இவர்கள் உண்மையான அரபிகள் அல்ல. இவர்களிடமிருந்து நீங்கள் விலகி விடுங்கள் என (கனவில்) கூறப்படுகிறது. மேலும் இறைவனைப் பெற விரும்பினால் இந்த மக்கள் மூலமாக மட்டுமே பெற முடியும் என எனக்கு (கனவில்) கூறப்படுகிறது. இந்த கனவைக் கண்ட சில நாட்களுக்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு குழு எங்கள் கிராமத்திற்கு வந்தது. இவர்கள் முஸ்லிம்கள் அல்ல. இவர்களிடமிருந்து விலகி நில்லுங்கள் என சிலர் கூறினர். வந்தவர்கள் அஹ்மதிகள் என்பதை அறிந்து அஹ்மதி முபல்லிக்குகள் முஸ்லிம்களே அல்ல. அவர்களிடமிந்து விலகி இருக்க வேண்டும் என கூறப்பட்டது. இதுவே இந்த ஆலிம்களின் ஃபத்வா ஆகும். அந்நிலையில் அவருக்கு தனது கனவு நினைவிற்கு வந்தது. பின்னர் சில நாட்களுக்குப் பிறகு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். அவர் ஐவரிகோஸ்ட் ஜல்ஸாவிலும் கலந்து கொண்டார். மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். அவர் உணர்வுப்பூர்வமான மனிதர் ஆவார்.

காஸ்கோ ஃப்ராஸ்வில் என்ற பகுதியில் இருந்து பஷீர் சாகிலா சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: முதன் முறையாக 2014 ஆண்டு உள்ளூர் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதையும் இனி அன்னார் விண்ணிலிருந்து உயிருடன் இறங்கி வர மாட்டார்கள் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். மேலும் ஒரு காலம் வரும். அப்போது முஸ்லிம்கள் பல்வேறு பிரிவுகளாக பிரிந்து விடுவர். இஸ்லாம் வெறும் பெயரளவில் மட்டுமே எஞ்சியிருக்கும். அப்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார். அன்னாரின் ஜமாஅத் மட்டுமே நேர்வழி பெற்ற ஜமாஅத்தாக இருக்கும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்ததையும் நான் அறிந்து கொண்டேன். அதன் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் புத்தங்கள் மற்றும் பிரசுரங்களை வாசிக்க ஆரம்பித்தேன். ஆய்வு செய்தேன். அதன் மூலம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உண்மையைப் புரியும் பாக்கியம் கிடைத்தது.

அந்நாட்களில் நான் ஓர் இரவு ஒரு கனவில் கண்டேன். ஒரு நபர் வெள்ளை மற்றும் ரோஜா நிறத்தின் ஆடையை எனக்கு பரிசாக அளித்தார். பின்னர் ரமாலானில் நான் மிக உயர்ந்த இடத்தில் இருப்பதாகக் கண்டேன். இதன் பிறகு நான் திருப்தி கொண்டேன். நான் எந்த பதையில் பயணித்துக் கொண்டிருந்தேனோ அது சரியான பாதைதான் என்பதைப் புரிந்து கொண்டேன். அதன் பிறகு அஹ்மதிய்யத்தை ஒப்புக்கொண்டு ஜமாஅத்தில் இணைந்து விட்டேன்.

கிர்கிஸ்தான் ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு புதிய அஹ்மதி இஸ்லின் ராமீல் சாஹிப், தான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட அந்த சம்பவத்தைக் கூறுகின்றார்கள்: நான் ஒரு முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவன் ஆவேன். எனவே இஸ்லாம் என்பது எனக்கு வினோதமான மார்க்கமாக இல்லை. ஆயினும் மார்க்கத்தின் நோக்கத்தைப் பற்றி ஒருபோதும் நான் சிந்தித்துக் கூட பார்த்ததில்லை. நான் பணி செய்து வந்த இடத்தில் அங்கு கிர்கிஸ்தான் ஜமாஅத்தின் சதர் சாஹிபைச் சந்தித்தேன். பல்வேறு தலைப்புகளில் நாங்கள் பேசி வந்தோம். மார்க்கத்தைப் பற்றியும் பேசுவோம். அவ்வாறு பேசிய போது அன்னாரின் பேச்சுக்களின் மூலம் எனக்கு இஸ்லாத்தின் உண்மை பற்றி தெரிய வந்தது. தற்போதைய காலக்கட்டத்தில் உண்மையான இஸ்லாமிய போதனைகளின்படி முஸ்லிம்கள் செயல்படுவ –தில்லை. அன்னாரிடம் பேசியதன் விளைவாக எனது அனைத்து கேள்விகளுக்கும் விடை

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

கிடைத்தது. திருக்குர்ஆன் சான்றுகள், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்களிலிருந்தும் குத்பாக்களிலிருந்தும் எனக்கு சான்று காட்டினார்கள். அதன் பிறகு நான் திருக்குர்ஆன் ஓதவும் ஆரம்பித்தேன். பின்னர் பைஅத் செய்யவும் முடிவு செய்தேன்.

அந்நாட்களில் நான் கனவில் கண்டேன். எனது தந்தையின் நண்பர் ஒருவர் இன்ன இடத்தில் ஓர் அடையாளம் உள்ளது. ஆயினும் அந்த அடையாளத்தைப் பற்றி எவருக்கும் கூறக் கூடாது என என்னிடம் கூறுகின்றார். ஏனெனில், தீவிரவாதிகள் வந்து அதனை அழித்து விடுவர் எனவும் எனக்கு கூறப்பட்டது. அந்த அடிப்படையில் அங்கு சென்று நான் பார்த்தேன். அது ஒரு பெரிய தோட்டமாக இருந்தது. அங்கு பட்டாம்பூச்சிகளைப் போன்று மக்கள் பறந்து கொண்டிருந்தனர். அல்லாஹ்வின் இந்த அடையாளத்தை நம்மால் எப்படி மறைக்க முடியும் என நான் எண்ணினேன். ஆனால் அதே தருணத்தில் நான் பறவையைப் போன்று பறக்க ஆரம்பித்தேன். பறந்தவாறு எனது தந்தையின் நண்பரின் வீட்டிற்குச் சென்றேன். அங்கு அவர் தேனீர் அருந்தி கொண்டிருந்தார். என்னைப் பார்த்து அவரால் அடையாளம் காண முடியவில்லை. பறவையாகவே அவர் எண்ணினார். நான் அவரை நோக்கி அல்லாஹு அக்பர் என்று மூன்று முறை கூறினேன். இந்தப் பறவை எப்படி பேசுகிறது? என அவர் சிந்தித்தார். இதற்கிடையில் விண்ணை நோக்கி நான் பறந்து சென்றேன். பறவையாக இருந்த நான் தற்போது வானவராக மாறினேன். இப்போது மீண்டும் பூமியைக் கண்டேன். பூமியில் அனைவருமே மரணித்திருந்தனர். எவரும் உயிருடன் இல்லை என்று நான் கனவில் கண்டேன். பின்னர் கனவிலேயே எனது வீட்டிற்கு நான் திரும்புகிறேன். வீட்டினுள் நுழைகிறேன். பின்னர் கண் விழித்து விட்டேன். பின்னர் நான் முடிவெடுத்தேன். அல்லாஹ் எனக்கு ஆன்மீக ஆற்றல்களை வழங்கியுள்ளான். எனவே அதன் பிறகு பைஅத் செய்து ஜமாஅத்திலும் இணைந்தேன்.

எகிப்தைச் சார்ந்த ஹம்தி முஹம்மது அப்துல் ஹாதி சாஹிப் கூறுகின்றார்: அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிவதற்கு வெகு காலம் முன்பு நான் கனவில் கண்டேன். நான் பாழடைந்த வனாந்தரத்தில் யாரும் அறியாத இடம் நோக்கி நடந்து செல்கிறேன். அந்தப் பயணத்தில் நல்லடியார் ஒருவர் என்னை சந்திக்கின்றார். அவர் என்னை அந்த பாதையிலிருந்து விலக்கி நல்ல பாதையின் பக்கம் அழைத்துச் செல்கின்றார். வினோதம் என்னவென்றால் நான் எந்த மறுப்பும் கூறாமல் அவரை பின்தொடர்கிறேன். அந்த நல்லடியார் என்னை நல்ல பாதையில் சென்று நிறுத்தி விடுகின்றார். காரணம் என்னவென்றால், அவருடைய என் மீதான அனுதாப உணர்வு எனக்கு உணர்வை ஊட்டியது. அவர் என்னை தீய முடிவிலிருந்து பாதுகாத்து நல்வழிப்படுத்தினார் என கனவில் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த பாதையில் நடந்து சென்ற சிறிது நேரத்தில் ஓர் உயரமான இடத்தை அடைகிறேன். அப்போது நான் கடந்து வந்த பாதையைக் கண்டேன். அங்கு ஒரு கடினமான அரசர் அங்கிருந்த மக்கள் மீது அநீதியிழைக்கின்றார். அப்போது நான் கனவில் நினைக்கிறேன். இந்த நல்லடியார் என்னை அந்த பாதையிலிருந்து அகற்றவில்லை என்றால் இன்று நானும் மற்ற மக்களைப் போன்று அநீதிகளுக்கு ஆளாகி இருப்பேன் என சிந்திக்கிறேன். அந்த நல்லடியார் இறைவனின் நபி ஹஸ்ரத் மூஸாவாக இருப்பாரோ என நான் கனவில் நினைக்கிறேன். சிறிது காலம் கழித்து ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டபோது நான் சென்று கொண்டிருந்த பாதை அழிவிற்குரிய பாதையாக இருந்தது. மேலும் அந்த அழிவிற்குரிய பாதையிலிருந்து என்னை காப்பாற்றியது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே ஆவார்கள் என நான் புரிந்து கொண்டேன். புதிய பாதை என்பது உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத் ஆகும் என்பதையும் நான் புரிந்து கொண்டேன்.

ஆக, நான் தற்போது சில உதாரணங்களை மட்டுமே எடுத்து வைத்துள்ளேன். கிர்கிஸ்தான் நாட்டிலிருந்தும் ஐரோப்பாவின் நாடுகளிலிருந்தும், மேற்கத்திய மற்றும் மத்திய கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தும், அரபு நாடுகளிலிருந்தும், பல்வேறு சமுதாயங்களிலிருந்தும் பல மொழி பேசுபவருக்கு ஒரே வகையான வழிகாட்டலே கிடைக்கின்றது. இந்த வழிகாட்டுதலை யார் வழங்குகின்றார்? நிச்சயமாக அல்லாஹ்வே வழங்குகின்றான். அதே அல்லாஹ்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் உன்னுடைய கலப்பற்ற அடியார்களின் எண்ணிக்கையை அதிகரிப்பேன் எனக் கூறினான்.

அடுத்து மராகஸ் என்ற நாட்டிலிருந்து ஸுகூர் என்பவர் தாம் பைஅத் செய்த சம்பவத்தை இவ்வாறு எழுதுகின்றார்: அஹ்மதிய்யத்தின் அறிமுகம் எனக்கு லிகாமல் அரப் நிகழ்ச்சியை தொடர்ந்து பார்த்து வந்ததால் கிடைத்தது. நான் கனவில் கண்டேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மலையின் உச்சிக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அன்னார் வெள்ளை நிற பாகிஸ்தான் ஆடை அணிந்திருந்தார்கள். நான் ஹுஸூருக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தேன். மலையின் உச்சியை அடைகிறேன். பின்புறமிருந்து ஓர் ஒளி வருகிறது. அது முழு மலையிலும் பரவுகின்றது. அது அதிகாலை நேரத்தின் வெண்மை நிற ஒளியாக உள்ளது. எனது உள்ளத்தில் அச்சம் ஏற்படுகிறது. எனது பாதம் வேகம் குறைகிறது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் எனது அச்சத்தை உணர்ந்து என்னை பின்னோக்கிப் பார்க்கின்றார்கள். அப்போது அன்னாருடைய ஒளிமயமான முகத்தைக் கண்டு எனக்கு வினோதமான உணர்வு ஏற்பட்டது. அதனால் நான் ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்குக் கூட என்னால் தாவ முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் நீங்கள் என்னை பின்தொடர்ந்தே வாருங்கள் என புன்முறுவலுடன் கூறினார்கள்.

ஆக, இந்த சம்பவத்திற்குப் பிறகு எனக்கு இருந்த அனைத்து அச்சமும் நீங்கி நான் தொடர்ந்து லிகாமல் அரப் நிகழ்ச்சியைப் பார்த்து வந்தேன். ஹுஸூரை பின்தொடர்ந்து சென்றேன். எந்த அளவுக்கு என்றால் எனக்கு பைஅத் செய்யும் பாக்கியம் கிடைத்தது. அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிந்த பிறகே நான் பைஅத் செய்ய முடிவு எடுத்திருந்தேன். ஆனால் M.T.A மூலம் உலகளாவிய பைஅத்தில் இணைந்திருந்தேன். ஆயினும் எனது உள்ளம் நிம்மதி பெறவில்லை. ஏனென்றால், பைஅத்தின் சொற்கள் ஆங்கிலத்தில் இருந்ததால் முழுமையாக எனக்கு புரியவில்லை. அதுபோன்று பைஅத் செய்ததில் எனக்கு திருப்தி இல்லாமல் இருந்தது. இருந்தபோதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத் நிபந்தனைகளை முழுமையாக வாசித்து, செயல்படுத்தி அதன் மூலம் ஜமாஅத்தில் இணைய வேண்டும் என விரும்பினேன். எனவே, எனக்கு ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டது. எனது மனைவிக்கும் ஜமாஅத்தை ஏற்றுக் கொள்ளும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்கினான். நாங்கள் இருவரும் 2010 –ல் பைஅத் நிபந்தனை படிவத்தை முறையாக பூர்த்தி செய்து அனுப்பி வைத்தோம்.

அல்ஜீரியாவைச் சார்ந்த டாக்டர் இஃஜாஸ் கரீம் சாஹிப் என்ற நண்பர் ஒருவர் தனது பைஅத் சம்பவத்தை எழுதுகின்றார்: மஜ்லிஸே ஆமிலா உறுப்பினராகவும் பொதுச் செயலராகவும் உள்ளார். இறை வழி கைதியாகவும் கடந்த நாட்களில் இருந்துள்ளார். தற்போதும் கூட அவருக்கு கடுமையான நெருக்கடி உள்ளது. அல்லாஹ் அவரது கஷ்டங்களை அகற்றுவானாக.

அவர் கூறுகிறார்: நான் முஸ்லிம் உலமாக்கள் திருக்குர்ஆனிற்கு வழங்கி இருந்த தவறான

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

தஃப்ஸீர்களைப் படித்து மிகவும் நிராசை அடைந்திருந்தேன். இது இறை வேதமாக இருக்குமா? என்றெல்லாம் திருக்குர்ஆனை பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். உர்தன் பகுதியில் சில நண்பர்கள் மூலமாக அஹ்மதிய்யத்தின் செய்தியைப் பற்றி கேள்விப்பட்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தஃப்ஸீரை படிப்பதற்கு முன்பு, நஃபில் தொழுது, அல்லாஹ்வே! என்னை நீ நேரான வழியில் நடத்துவாயாக என நான் துஆ செய்தேன். அதன்பின் தஃப்ஸீரைப் படித்துக் கொண்டே நான் சென்ற போது எனது உள்ளம் திறந்து கொண்டே சென்றது. அந்த கூற்றின் தாக்கம் எனது உள்ளத்தில் ஏற்பட்டது. உள்ளம் நடுங்கியது. நிச்சயமாக இது ஒரு மனிதனின் புத்தகம் அல்ல. நிச்சயமாக இது இறைவனின் கூற்றே என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இருந்தபோதிலும் நான் இஸ்திகாரா செய்து துஆ செய்தேன். கனவில் பார்த்தேன். நண்பர்களுடன் ஒரு நகரத்தை நான் கடந்து சென்று கொண்டிருக்கிறேன். ஓர் ஒளி என்னுடன் வந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் தொலைபேசி மணி அடிக்கின்றது. அப்போது அதில் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் தொலைபேசி எண் அதில் வருவதாக உணர்ந்தேன். நான் அவர்களை திரும்ப அழைப்பேன். அவர் எனக்கு பதில் அளிக்கவில்லை என்றால் அன்னார் உண்மையான நபி அல்லது உண்மையான நபி இல்லை என நினைக்கிறேன். எனது உள்ளத்தில் ஏன் இந்த எண்ணம் வந்தது என தெரியவில்லை. அதே போன்று நான் திரும்ப அழைத்தேன். தொலைபேசி மணி அடித்துக் கொண்டே இருந்தது. அழைப்பு ஏற்கப்படவில்லை. பிறகு அவர்களின் மகத்தான தோற்றம் வெளிப்பட்டது. நான்திருக்குர்ஆனை ஓத ஆரம்பித்தேன். ஷய்த்தான் என்னை குழப்பாமல் இருப்பதற்காக அவூதுபில்லாஹ் கூறினேன். அதன் பிறகு அச்சத்துடன் நான் கண் விழித்தேன். அப்போது ஃபஜ்ர் தொழுகைக்கான நேரமாக இருந்தது. கனவு உண்மையான கனவு என அறிந்து கொண்டேன். அதன் பிறகு பைஅத்தும் செய்து விட்டேன்.

மக்களுக்கு அடையாளங்கள் எவ்வாறு வெளிப்படுகின்றன? மேலும் அது எப்படி பைஅத்திற்கு காரணியாக அமைகின்றது என்பதையும் பாருங்கள். அது பற்றி செனிகாலின் முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகின்றார்கள்: செனிகாலின் காஸோமாத் என்ற பகுதியில் மூன்று கிராமங்களில் அஹ்மதிய்யத் புதிதாக நிலை பெற்றுள்ளது. கிராமங்களில் ஜமாஅத்தின் வளர்ச்சியைக் கண்டு அங்குள்ள எதிரி முல்லாக்கள் மற்றும் கிராமத் தலைவர்கள் ஜமாஅத்திற்கு எதிராக பல திட்டங்களைத் தீட்டினர். திருக்குர்ஆனை ஓதி தலையில் அடித்து அல்லாஹ் ஜமாஅத்தையும் முபல்லிக்கையும் அழித்து விடுவான் எனக் கூறினார்கள். அவர்கள் அனைவரும் முஸ்லிம்கள்தான். ஆனால் நடந்தது என்னவென்றால் துஆ செய்த சில நாட்களுக்குள்ளேயே அவர்களின் பெரிய இமாமை பாம்பு கடித்தது. ஒட்டுமொத்த இமாம்களும் ஒன்று கூடி அல்லாஹ்வே! இந்த இமாமை காப்பாற்றுவாயாக என துஆ செய்தார்கள். ஆனால் பாம்பு கடித்த அந்த பெரிய இமாம் இரத்த வாந்தி எடுத்து இறந்து போனார். சில நாட்களுக்குப் பிறகு அந்த துஆவில் கலந்து கொண்ட அந்த கிராமத்தின் தலைவரையும் பாம்பு கடித்தது. அவரை காப்பாற்றுவதற்காகவும், இமாம்கள் ஒன்று கூடி துஆ செய்தார்கள். ஆனால் அவரையும் அவர்களால் அழிவிலிருந்து காப்பாற்ற முடியவில்லை. இந்த அடையாளங்களைப் பார்த்து மக்களுக்கு அச்சம் ஏற்பட்டது. அஹ்மதிய்யத் மற்றும் அஹ்மதி முபல்லிக்கிற்கு எதிராக ஃபத்வா செய்ததன் விளைவு தான் இந்த நிலை என மக்களே பேசத் தொடங்கினர். அதற்கு முல்லாக்கள் இவை அனைத்தும் அல்லாஹ் செய்யவில்லை. ஜின்களே பாம்புகளைப் பிடித்து வைத்துள்ளனர். சில நாட்கள் கழிந்து துணைத் தலைவரையும் பாம்பு கடித்து அவரும் இதே நிலையைக் கடந்தவாறு இறந்தார். அதற்குப் பிறகு மக்கள் நமது முபல்லிக்கிடம் வந்தனர். இவ்வாறு இவர்கள் ஜமாஅத்திற்கு எதிராக துஆ செய்தது நமது முபல்லிக்கிற்குத் தெரியாது. கிராமவாசிகள் தாமே அனைத்தையும் கூறினர். எம்மைக் காப்பாற்றுங்கள். அந்த பாம்புகள் கடித்து தான் இவர்கள் இறந்துள்ளனர் எனக் கூறினர். அவரையும் பாம்பு கடித்தது. தீய துஆ செய்ததை மக்கள் அறிந்து எங்களை காப்பாற்றுங்கள்; எமது துஆ எம்மைப் பிடித்து விட்டது என்றனர். எங்களுக்காக ஏதாவது செய்யுங்கள் என்று முபல்லிக் சாஹிபிடம் அவர்கள் கூறினர். முபல்லிக் சாஹிப் அந்த கிராமத்திற்குச் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின், எதிரிகளின் ஃபத்வாவை அவர்கள் பக்கமே திருப்புவான்; ஜமாஅத்திற்கு முன்னேற்றத்தை வழங்குவான் என்ற எச்சரிக்கையை எடுத்துக் கூறினார். பிறகு அல்லாஹ்விடம் துஆ செய்தார். அதன் பிறகு சுமார் 700 பேருக்கும் அதிகமானவர்கள் புதிதாக பைஅத் செய்துள்ளனர். அங்கு ஜமாஅத் புதிதாக உருவாகியுள்ளது. எதிரிகளில் சில நல்லியல்பு கொண்டவர்களும் இருப்பர். அவர்களுக்கு அல்லாஹ் நேர்வழியை திறந்து கொடுத்து விடுகிறான்.

இது தொடர்பான ஒரு சம்பவத்தை ஃபுர்கினோஃபாஸோவின் ஒரு முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்கள்: எங்களுடைய ஜமாஅத்தில் ஒருவர் உள்ளார். அவர் இந்த கிராமத்தின் ஒரு வஹ்ஹாபி இமாமின் மகன் ஆவார். அவர் எங்களுடன் ஒரு தப்லீக் அமர்வில் கலந்து கொண்டார். அஹ்மதியல்லாத முல்லா ஒருவர் Phd படித்திருந்தார். அவர் சான்றுகள் தருவதற்குப் பகரமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கண்ணியத்திற்கு எதிராகவே பேசிக் கொண்டிருப்பதை அவர் கண்டார். இது அவரது உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் ஜமாஅத்தைப் பற்றி ஆராயத் தொடங்கினார். ரேடியோவில் ஜமாஅத்தின் தப்லீக் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்டு வந்தார். வஹ்ஹாபி இமாமாக இருந்த தனது தந்தையிடம் சென்று ஜமாஅத்தைப் பற்றி கேட்டார். அதற்கு அஹ்மதிகள் முஸ்லிம்களே கிடையாது. நீர் அவர்களுக்கு அருகில் கூட செல்லக் கூடாது என்று கூறினார். ஆனால் அந்த இமாமின் மகன் தொடர்ந்து ரேடியோவில் நமது ஜமாஅத்தின் தப்லீக் நிகழ்ச்சிகளைக் கேட்டு வந்தார். பின்னர் நமது முஅல்லிமுடன் தொடர்பு கொண்டு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். அவரது தந்தைக்கு இவ்விஷயம் தெரிந்தவுடன் ஏசிப் பேசி வீட்டை விட்டே வெளியேற்றி விட்டார். சில நாட்களுக்குப் பிறகு அவரது தாயிடம் இருந்து அவருக்கு அழைப்பு வந்தது. நீ சென்று விட்ட பிறகு வீட்டில் அமைதி குறைந்து விட்டது. எனவே, வீட்டிற்குத் திரும்பி வந்து விடு என்று கூறிய தாயின் கூற்றைக் கேட்டு வீட்டிற்குத் திரும்பிச் சென்றார். ஆனால் அவரது தந்தையோ இவர் எனது மகன் அல்ல. இவர் காஃபிர் ஆகி விட்டார் என முழு கிராம மக்களையும் ஒன்று கூட்டிக் கூறினார். இதன் தாக்கம் ஆப்பிரிக்கர் மத்தியில், புது அஹ்மதிகளின் மத்தியில் ஏற்பட்டது. அங்கு பொதுவாக ஒரு தந்தையின் தீய துஆவைக் கேட்பது தவறானதாகக் கருதப்பட்டது. நீங்கள் அஹ்மதிய்யத்தில் உறுதியுடன் நிலை நில்லுங்கள் என அவருக்கு கனவில் சொல்லப்பட்டது. அந்த கனவிற்குப் பிறகு அவர் உறுதியாக நின்றார். என்ன நடந்தாலும் சரி, நான் அஹ்மதிய்யத்தை விட்டு ஒருபோதும் விலகமாட்டேன் எனக் கூறி, அதில் உறுதியாக நின்றார்.

பாருங்கள்! ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருப்பவர்களுக்கு கூட அல்லாஹ் அஹ்மதிய்யத்திற்கான வழிப் பாதையைத் திறந்து கொடுக்கின்றான். அவர்களுக்கு உறுதிப்பாட்டையும் வழங்குகின்றான். அல்லாஹ் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பரப்ப ஹஸ்ரத்


B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000



National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு நல்லடியாரின் கூட்டத்தை வழங்கியுள்ளான். அவர்களிடம் நேசமும் பாசமும் அதிகமாக நிலை பெற்றிருக்கும்.

இது தொடர்பான சம்பவம் ஒன்றை பெனின் நாட்டு அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்: பராக்கோ நகரத்தைச் சார்ந்த பகுதியில் ஒரு கிராமம் இருந்தது. அதன் பாதைகள் மிகவும் மோசமாக இருந்தது. காடுகளைக் கடந்துதான் அங்கு செல்ல வேண்டும். கடந்த ஆண்டு நாங்கள் அங்கு சென்றிருந்தோம். அங்கு பைஅத்தும் நடந்திருந்தது. இந்த ஆண்டு அங்கு மரங்களுக்கிடையில் ஜல்ஸாவும் நடந்தது. அக்கம் பக்கத்திலுள்ள புதிய அஹ்மதிகளும் அங்கு அழைக்கப்பட்டனர். தலைமையக பிரதிநிதிகளும் நீண்ட பயணம் செய்து அங்கு சென்றடைந்தார்கள். மக்கள் தக்பீர் முழக்கமிட்டு அவர்களை உணர்வுப்பூர்வமாக வரவேற்றார்கள். மக்களைக் கண்டு எங்களது பயணக் களைப்பு அனைத்தும் நீங்கியது என அவர்கள் கூறினர்.

அங்கு மகாரா என்ற ஒரு ஜமாஅத்தின் சதர் மக்களிடம் இவ்வாறு கூறினார்: மக்களே! இதுதான் உண்மையான பாதையாகும். இதுவே உங்களுக்கு வாழ்வளித்துள்ளது. இங்கு நாமே உண்மையான மார்க்கமாகும். இவர்களே நமக்கு அன்பைக் கற்றுத் தந்துள்ளார்கள். ஆனால், மற்ற முபலிக்குகள் நமக்கு வெறுப்பைக் கற்றுக் கொடுத்தார்கள். அஹ்மதிய்யத்தே நம்மை இங்கு ஒன்று திரட்டியுள்ளது.

அதேபோன்று ஜோரோ என்ற பகுதியைச் சார்ந்த ஜமாஅத்தின் தலைவர் கூறினார்: அஹ்மதிய்யத் தான் அமைதியைக் கற்றுத் தந்துள்ளது. எங்களிடம் எந்தப் பாகுபாடும் செய்யவில்லை. நான் ஜல்ஸாவிலும் இதே காட்சியைக் கண்டேன். எல்லாரையும் ஒரே இடத்தில் ஒன்று திரட்டினார்கள். அங்கு எந்த சண்டையும் சச்சரவும் இல்லை. அல்லாஹ் நம் அனைவருக்கும் அஹ்மதிய்யத்தை வழங்கி நம்மீது அருள் செய்துள்ளான். நாம் அனைவரும் தற்போது கொடுமையாளியாக உள்ளோம்.

பிறகு ஒரு புதிய அஹ்மதி கூறினார்: நாம் அஹ்மதிய்யத்திற்கு நன்றி செலுத்த வேண்டும். காட்டுவாசிகளாக இருந்த நம்மை அல்லாஹ் தற்போது, எங்கு தந்தை மகனுக்கு ஸலாம் கூறமாட்டாரோ அங்கு வந்து அஹ்மதி முபல்லிக்குகள் இந்த நிலையை உருவாக்கியுள்ளனர். அதாவது எல்லா பக்கமிருந்தும் ஸலாத்தின் குரல் வருகிறது. அஹ்மதி முஸ்லிம்கள் இந்த நிலையை உருவாக்கினர்.

முஸ்லிம் சமுதாய மக்களிலிருந்து அல்லாஹ் நல்லியல்பு கொண்ட மக்களை அஹ்மதிய்யத்தை எப்படி ஒப்புக் கொள்ளச் செய்கிறான் என்பதைப் பாருங்கள்.

செராலியோன் அமீர் எழுதுகிறார்: புரோ ரீஜன் செராலியோனின் ஒரு ஜமாஅத் சேலுவில் கடந்த ஆண்டு புதிய ஜமாஅத் உருவானது. ஆனால் அங்குள்ள இமாம் அப்போது பைஅத் செய்திருக்கவில்லை. சிறிது காலம் கழிந்த பிறகு ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவிப்பு செய்தார். சில சமூக விரோதிகள் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் அங்கு வந்தனர். இந்த பள்ளிவாயில் மாலிக்கி பிரிவிற்குச் சொந்தமான –தாகும். எனவே, நீங்கள் அஹ்மதிய்யத்தை விட்டு விட வேண்டும் அல்லது இந்த பள்ளிவாயிலின் இமாமத் பொறுப்பை விட்டு விட வேண்டும் என இமாமிடம் சென்று அவர்கள் கூறினார். அதற்கு நான் நீண்ட ஆய்விற்கு பிறகே அஹ்மதிய்யத் உண்மை என ஒப்புக் கொண்டுள்ளேன். நான் இமாமாக இருப்பதால் உங்களை விட அஹ்மதிய்யத்தை என்னால் நன்றாக விளங்க முடியும். அஹ்மதிய்யத்தே உண்மையாகும். நான் உங்களுடைய பள்ளிவாயிலின் இமாமத்தை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன் என்று அவர் கூறினார். ஆனால் என்னால் ஒருபோதும் அஹ்மதிய்யத்தை விட முடியாது என்று கூறினார்.

உண்மையைக் கண்டறியும் அகப்பார்வையும் கொண்ட இமாம்களும் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்கியிருந்தான். இதற்கு நேர் எதிராக பாகிஸ்தான் முல்லாக்களுக்கு குழப்பம் செய்ய மட்டுமே தெரிந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு தனது வயிறை நிரப்ப மட்டுமே தெரியும்.

பெனின் நாட்டிலிருந்து உள்ளூர் முஅல்லிம் ஒருவர் தவ்ஃபீக் சாஹிப் எழுதுகிறார்: சேரோ கரீம் என்ற ஒரு நண்பருக்கு கிறித்தவத்திலிருந்து அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. தனது கிராமத்தில் தப்லீக் செய்வதற்கு அழைத்தார். கிராமத்தில் எவருமே ஏற்றுக் கொள்ளா விட்டாலும் என்னை எவ்வளவு எதிர்த்தாலும் நான் அஹ்மதியாகவே இருப்பேன். தனியாகவே தப்லீகும் செய்து வருவேன். இது புதிதாக வந்தவருக்கு தப்லீக் செய்வதில் உள்ள உண்மையாகும். பழைய அஹ்மதிகளுக்கு இதில் படிப்பினை உள்ளது. அவரது கிராமத்தில் தப்லீக் செய்யப்பட்டபோது 20 பேருக்கு பைஅத் செய்யும் பாக்கியம் கிடைத்தது. சிறிது காலம் கழித்து நைஜீரியாவிலுள்ள ஜாமிஆ மாணவர் பஷீர் சாஹிப் தர்பிய்யத் பணிக்காக அங்கு அனுப்பட்டார். அதனால் மேலும் 100 பேர் பைஅத் செய்யும் பாக்கியம் பெற்றனர்.

அங்கிருந்த பள்ளிவாயில் இமாம் ஜமாஅத்தின் வளர்ச்சியைக் கண்டு எதிர்க்கத் தொடங்கினான். தினமும் காலையில் ஜமாஅத்திகு எதிராக சொற்பொழிவாற்றத் தொடங்கினார். ஆனால் அஹ்மதிகளோ உறுதிப்பாட்டுடன் இருந்தனர்.

அங்குள்ள முதல் அஹ்மதி பாமஹிரா கரீம் கூறினார்: இந்த கிராமத்தில் பள்ளிவாயிலுக்கு இடம் அமையும் வரை எனது வீடு ஜமாஅத்திற்கு உள்ளது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் அங்கு ஒன்று கூடி ஜுமுஆ தொழுகின்றனர். பெருநாள் தொழுகையும் தொழுது வந்தனர். அஹ்மதிகள் தினமும் முன்னேறி வருவதைக் கண்ட இமாம் அவரது வீட்டிற்கு சென்று அவரை காஃபிர் என்று கூறினார். அதற்கு கரீம் சாஹிப் நான் கிறித்தவராக இருந்தபோது எவருமே என்னை சந்திக்க வரவில்லை. இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எனக்கு எட்ட வைக்கவில்லை. நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஏற்றுக் கொண்ட பிறகு என்னை முஸ்லிமாக ஏற்றுக் கொள்ளாமல் காஃபிர் எனக் கூறுகின்றனர். நான் அஹ்மதியாகவே இருக்கிறேன்; இருப்பேன்.

முல்லாக்கள் இழிவடைந்து அங்கிருந்து வெளியேற வேண்டியது வந்தது. அல்லாஹ்வின் அருளால் மிகச் சிறப்பான முறையில் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பவராக அவர் ஆகி விட்டார். பள்ளிவாயிலின் இமாமின் எதிர்ப்பிற்கிடையிலும் உறுதிப்பாட்டுடன் நிலை நின்று ஜமாஅத்தை தப்லீக் செய்து வருகின்றார். பலர் அஹ்மதிகளாவதற்கும் காரணியாக அவர் திகழ்கின்றார்.

ஃபுர்கினோஃபாஸோவின் உள்ளூர் முஅல்லிம் அப்துர் ரஹீம் கூறுகின்றார்: ஒரு புதிய அஹ்மதியான ஜாது இப்ராஹீம் இதற்கு முன் மது அருந்துபவராக இருந்தார். மக்கள் அவரை பைத்தியக்காரர் என்று சொல்லும் அளவிற்கு மது அருந்தி வந்தார். எனவே மக்கள் அவருக்கு அருகில் கூட செல்ல மாட்டார்கள். அந்த அளவுக்கு அவர் குடித்து வந்தார். ஆனால் ஒருநாள் அவர் நோயாளி ஆனார். எவரும் அவரை சந்திக்க வரவில்லை. அவருக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ரேடியோ கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ் அவருக்கு அருள் செய்து நேர்வழி வழங்கினான். மது குடிப்பதையே விட்டு விட்டார். ஆனால் சில காலம் கழிந்த பிறகு நோயாளி ஆனார். இது தனது கடைசி தருணம் என்று எண்ணினார். ஆனால் அவர் இறைவா! நான் இமாம் மஹ்தியை உண்மையாளர் என்று ஏற்றுக் கொண்டுள்ளேன். அவர்கள் சார்பாக நீயே எனக்கு நீண்ட ஆயுளை வழங்குவாயாக என்று துஆ செய்தார். அல்லாஹ் அவருக்கு நீண்ட ஆயுளையும் உடல்நலத்தையும் வழங்கினான்.

**S. MABU**
87541 71700
81240 22479
90955 89992
78719 66352

**STAR ORGANIC**
**TERRACE GARDEN DIVISION**

- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools

Email: Starorganicmabu@gmail.com
**THARPOLIN + POULTRY**
**EQUIPMENTS SALES**
**TIRUNELVELI DIST.**

**Classic Mobile's & Watch,**
**Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**0422-2399980, 4351980**
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
**WATCH, MOBILES & ELECTRONICS**
**SALES & SERVICE**

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

அதன் பிறகு அவர் ஜல்ஸாவிலும் கலந்து கொண்டார். நான் இன்று உயிருடன் இருக்கிறேன் என்றால் அஹ்மதிய்யா ஜமாஅத்தே காரணம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் விளைவே ஆகும் என்று அவர் கூறுகின்றார்.

ஐவரிகோஸ்டிலிருந்து ஒரு நண்பர் டாமேலே அவர்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தை எழுதுகின்றார்: நான் சிலைகளை வணங்கி வந்தேன். ஒரு நாள் கனவில் கண்டேன். ஒரு மூதாட்டி தொழுகை விரிப்பு ஒன்றை தந்து தொழு என்று கூறுகின்றார். அந்த கனவு புரியவில்லை. ஒரு முஸ்லிம் ஆலிமிடம் சென்று கனவின் விளக்கத்தைக் கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் தொழுது வாருங்கள் என்பதே பொருள் எனக் கூறினார். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாயிலில் தொழுது வந்தேன். எனினும் எனது கவனம் சிலை வணக்கத்தின் பக்கமே இருந்தது. சில நாட்கள் கழித்து மீண்டும் அதே கனவைக் கண்டேன். அந்த மூதாட்டி கனவில் மீண்டும் தொழு என்று கூறினார். நான் தொழத் தொடங்கி விட்டேன். ஏன் மீண்டும் கூறப்படுகிறது என எனது பெரிய அஹ்மதி சகோதரரிடம் கேட்டேன். அவரிடம் கனவைக் கூறினேன். அதற்கு நீங்கள் ஜமாஅத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என விளக்கம் அளித்தார். அன்னாரின் ஆலோசனைக்கேற்ப உள்ளூர் முபல்லிக்குடன் தொடர்பு கொண்டு ஜமாஅத்தைக் கூறத் தொடங்கினேன். பின்னர் பைஅத்தும் செய்தேன். பைஅத்திற்கு முன்பும் நான் தொழுது வந்தேன். ஆயினும் எனது உள்ளம் சிலை வணக்கத்தின் பக்கமே இருந்தது. ஆனால் பைஅத் செய்து ஜமாஅத்தை ஒப்புக் கொண்ட பிறகு சிலை வணக்கத்தைப் பற்றிய எண்ணம் எனது உள்ளத்திலிருந்து முற்றிலும் அழிந்து போனது. அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகே எனக்கு உண்மையான தொழுகையும் கிடைத்தது. உண்மையான இறைவனைப் பற்றிய அறிவும் கிடைத்தது. அஹ்மதிய்யத்தின் பரக்கத்தின் விளைவின் மூலமாகவே எனக்கு உண்மையான இறைவனும் கிடைத்துள்ளான்.

ஆக, இது புதிய அஹ்மதிகளின் சம்பவங்கள் ஆகும். இவை அனைத்தும் பழைய அஹ்மதி –களுக்குப் படிப்பினையாகும்.

காஸானிலிருந்து ஒரு முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: காஸான் ஜமாஅத்தின் பரீத் இப்ராஹீம் சாஹிபின் கடையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் படத்தை வைத்திருந்தார். நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் இமாம் மஹ்தி வந்து விட்டார் என்றும் ரஷ்யன் மொழியில் அந்தப் படத்தின் கீழ் எழுதி வைத்திருந்தார். அதில் இணையதள முகவரியும் இருந்தது. ஒரு நாளில் 10 ஆயிரம் பேர் அந்தக் கடையைக் கடந்து செல்லும் முக்கிய பஜார் ஆகும். அந்தப் படத்தைப் பார்த்து மக்கள் தொடர்பு கொள்ள ஆரம்பித்தனர். தப்லீகிற்கான புதிய வழிகள் திறந்தன. இப்படியும் மக்கள் தப்லீகிற்கான வழிகளை உருவாக்குகின்றனர். சமீபத்தில் ஒரு பாகிஸ்தானிய அஹ்மதி தனது வியாபார நிமித்தமாக அங்கு சென்றார். அவர் கூறுகிறார்: நான் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அஹ்மதி அல்லாத இரண்டு பாகிஸ்தானியர் அங்கு நின்று கொண்டிருந்தனர். ஒருவர் அந்த படத்தைப் பார்த்து மற்றவரிடம் இது மிர்ஸா சாஹிப் காதியானியின் படம் என்று கூறினார். அப்போது அந்தக் கடையில் இருந்த பெண் அதனைக் கேட்டு இது இமாம் மஹ்தி ஆவார்கள். அவர்கள் ஏற்கனவே தோன்றி விட்டார்கள் எனக் கூறினார். இவ்வளவு தான் கேட்டு விட்டு உடனே அங்கிருந்து போய் விட்டேன் என்று கூறுகிறார்.

ஆக, இதுவும் தப்லீகிற்கான வழிமுறை ஆகும். அஹ்மதிகள் இப்படியும் தப்லீக் செய்கின்றனர்.

ஃபுர்கினோஃபாஸோவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்: நமது நண்பர் பாரே அவர்கள் புதிய அஹ்மதி ஆவார். பைஅத்திற்குப் பிறகு ஒரு கனவில் கண்டார். அவர் ஓரிடத்திற்குச் செல்கிறார். அங்கு ஒளியாக உள்ளது. ஆரம்பத்தில் அவர் வஹ்ஹாபியாக இருந்தார். அந்தக் கனவிற்குப் பிறகு அவர் தனது நண்பர்களிடம் நீங்கள் உண்மையான ஒளியைப் பார்க்க வேண்டும் என்றால் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி வந்தார். ஏனெனில் அஹ்மதிய்யத்தில் கிலாஃபத் அமைப்பு உள்ளது. கிலாஃபத் அமைப்பு மூலமே வெற்றி கிடைக்கும் எனக் கூறினார். இப்போது அவர் நிரந்தரமாக தப்லீக் செய்து வருகிறார்.

அல்லாஹ்வின் அருளால் அவர் தற்போது அதிகமாக தப்லீக் செய்பவராக உள்ளார். அல்லாஹ் இஸ்லாத்தின் உண்மையான போதனையின் பக்கம் மக்களைக் கொண்டு வருகிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவே ஒருநாள் உண்மை இஸ்லாம் உலகின் மீது மேலோங்கி நிற்கும் – இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அவர்கள் இந்த அருளில் பங்கு பெறுவதற்காக நிரந்தரமாக தப்லீக் செய்பவர்களாகத் திகழ்வார்களாக. மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக இருப்பார்களாக.

நான் தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். முதல் ஜனாஸா, மதிப்பிற்குரிய குர்ஷீத் ருகைய்யா சாஹிபா உடையதாகும். இவர் மர்ஹூம் மன்சூர் அஹ்மது கனோக்கே அவர்களின் மனைவி ஆவார். கடந்த வெள்ளிக்கிழமை அன்று பெருநாள் அன்று இவரது வஃபாத் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

சஹாபி கபீருத்தின் சாஹிபின் கொள்ளுப் பேத்தி ஆவார். பலவிதமான சோதனைகளை தனது கணவருடன் தப்லீக் மைதானத்தில் எதிர்கொண்டார். ஆயினும் பொறுமை செய்தார்கள். தொழுகையை பேணினார்கள். தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். கிலாஃபத்துடன் பற்று கொண்டிருந்தார்கள். நன்றியுணர்வு கொண்ட பெண்மணியாக இருந்தார்கள். M.T.A – வில் ஹுஸூர் குத்பாவை தவறாமல் கேட்டு வந்தார். பிறருக்கும் குத்பா கேட்கும்படி கவனமூட்டி வந்தார். நீண்ட காலமாக நோயுற்றிருந்தார். சில கஷ்டங்கள் ஏற்பட்ட பிறகு கூட சக்திக்கேற்ப சிகிச்சை செய்தால் போதும் எனக் கூறி விட்டார். வஸிய்யத் செய்திருந்தார். இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். அன்னாரின் மருமகன் மொராக்கோ, ஃபிரான்ஸ் –ல் இருக்கின்றார். அல்லாஹ் மர்ஹூமாவின் தர்ஜாக்களை உயர்த்துவானாக. அன்னாரின் சந்ததிகளையும் அன்னாரின் நன்மைகளில் நிலைநாட்டுவானாக.

இரண்டாவது ஜனாஸா, டாக்டர் ஸலாபுத்தீன் சாஹிப் உடையதாகும். இவர் அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியைச் சார்ந்தவர். இவர் 10 செப்டம்பர் 2017 அன்று மரணமடைந்தார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர் அறிவியல் கட்டுரை ஒன்றில் Phd படித்திருந்தார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் காலத்தில் விடுமுறையில் இலண்டன் அடிக்கடி வந்து செல்வார். பாதுகாப்புத் துறையில் பல தொண்டுகளை ஆற்றியுள்ளார். அவர் மிக கண்ணியமிக்க நபர் ஆவார். விரைவில் பிறரை தாக்கத்திற்குள்ளாக்கி அனைவரின் அன்பையும் பெற்றிருந்தார். மிக உயரமான மனிதராக இருந்தார். அறிவால் பலரின் அன்பைப் பெற்றிருந்தார். இந்த சிறப்புகளுக்கு மத்தியிலும் மிக பணிவை மேற்கொண்டார். பலதரப்பட்ட மனிதர்களையும் சந்தித்து வந்தார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் காலத்தில் தனிச் செயலர் அலுவலகத்திலும் தொண்டாற்றியுள்ளார். மிக அதிகமாக தொண்டாற்றக் கூடியவராவார்.

அமெரிக்கா ஜமாஅத்தின் அமீர் கூறுகின்றார்கள்: டாக்டர் ஸலாபுத்தீன் சாஹிப் அமெரிக்காவின் நியூ ஜெர்ஸி ஜமாஅத்தின் உறுப்பினர் ஆவார். கடந்த ஜல்ஸாவின் போது லங்கர் கானாவில் அசாதாரண ஊழியராகத் தொண்டாற்றினார். எங்கள் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். தன்னலமற்று தொண்டாற்றி வந்தார். எப்போதும் எந்த தொண்டிற்கும் தயாராக இருந்தார். எனக்கு எந்த பதவியும் தேவையில்லை. என்னிடமிருந்து நீங்கள் எந்த தொண்டை பெற வேண்டுமோ பெற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறினார். கிலாஃபத்துடன் நன்றியுணர்வு மிக்க கலப்பற்ற தொடர்பு இருந்தது. குழந்தைப் பருவம் முதல் ரப்வாவில் அவரை அறிவேன். நான் கலீஃபா ஆன பிறகு என்னிடம் சிறப்பான தொடர்பை அன்பைக் கண்டேன். அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அல்லாஹ் அவரது அந்தஸ்தை உயர்த்துவானாக. அவருடைய சகோதரிகளுக்கும் பொறுமையை வழங்குவானாக. மவ்லவி இமாமுத்தீன் சாஹிபுடைய சந்ததிகளிடம் இவரது நன்மைகளை தொடரச் செய்வானாக.

★ ★ ★ ★ ★

# அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம்

✪ ✪ ✪ மவ்லானா அதாவுல் முஜீப் ராஷித் (இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாயிலின் இமாம்) ✪ ✪ ✪

அல்லாஹ், மனிதனை இந்த உலகில், அவன் ஓர் அடியான் என்ற நிலையில் வாழ்வைக் கழித்தவாறு இறை நெருக்கத்திற்கான எல்லா வழிகளையும் பின்பற்றி நடப்பதற்காகவே படைத்துள்ளான். அதன் மூலமாக அவன் உலகமாகிய இந்த செயல் வீட்டிலிருந்து நற்கூலி கிடைக்கும் வீடாகிய மறுவுலகிற்குச் செல்லும் போது அவன் தனது வாழ்வின் நோக்கத்தில் வெற்றி பெற்றவாறு இறை திருப்தியின் நிரந்தர சுவர்க்கத்தில் நுழைய முடியும். இந்த மகத்தான நோக்கத்தில் வெற்றி பெறுவதற்காக இறைவன் எந்த வழிகளையும் வசதிகளையும் மனிதனுக்கு வழங்கியுள்ளானோ அவற்றில் ஒரு முக்கியமான வழி இறை வழியில் பொருள் தியாகம் செய்வதாகும். அதாவது, அல்லாஹ்வின் வழியில் அவனது திருப்தியைப் பெற வேண்டும் என்ற கலப்பற்ற எண்ணத்துடன் செலவு செய்வதாகும். இந்தக் கட்டுரையில் நான் இவ்விஷயம் தொடர்பாக சில கருத்துக்களை உங்களிடம் கூற விரும்புகின்றேன்.

***திருக்குர்ஆன் வசனங்கள்:***

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக திருக்குர்ஆனின் வடிவில் ஒரு முழுமை பெற்ற ஷரீஅத்தை இறக்கியுள்ளான். அதைப் பற்றி அவன் هدًى للناس அது மக்களுக்கு வழிகாட்டக்கூடியது என்றும், هدًى للمتقين குறிப்பாக இறையச்சமுள்ளவர்களுக்கு நேர்வழிகாட்டக்கூடியது என்றும் கூறியுள்ளான். மனிதன் தனது வாழ்வின் நோக்கத்தைப் பெறுவதற்கு தேவைப்படுகின்ற ஒவ்வொரு விஷயம் தொடர்பாகவும் அது மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கின்றது. இந்த விஷயங்களில் ஒரு முக்கிய விஷயம் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. எந்த அளவு வலியுறுத்தியும் விளக்கமாகவும் இந்தக் கருத்து திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது என்றால், அதன் மூலம் அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்வதன் முக்கியத்துவம் தெளிவாகத் தெரிகின்றது. மேலும், இந்த வழியைக் கடைபிடிப்பதன் மூலமாகவே மனிதன் தனது வாழ்வின் நோக்கத்தை அடைவதில் வெற்றி பெற முடியும்.

திருக்குர்ஆனைப் படிக்க ஆரம்பிக்கும்போதே அல் பக்கரா அதிகாரத்தின் தொடக்கத்தில் வருகின்ற இந்த வசனங்கள் நமது கவனத்தை ஈர்க்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ فِيْهِ هُدًى لِّلْمُتَّقِيْنَ திருக்குர்ஆன் வாக்களிக்கப்பட்ட வேதமாகும். அதில் அணுவளவு கூட சந்தேகம் இல்லை. இது இறையச்சமுள்ளவர்-களுக்கு நேர்வழி காட்டுவதற்கு உள்ள வழியாக இருக்கின்றது. (2:3) இங்கு ஒரு கேள்வி நமது மூளைகளில் உதிக்கின்றது. அதாவது, இந்த இறையச்சமுள்ளவர்கள் என்பவர் யார்? மனிதன் இறையச்சமுள்ளவனாக எப்படி ஆக முடியும்? என்பதே அந்தக் கேள்விகளாகும்.

இந்த இரண்டு கேள்விகளுக்கும் அல்லாஹ் இவ்வாறு பதில் கூறியுள்ளான்:

الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ

அதாவது, இறையச்சமுள்ளவர்கள் யார் என்றால் அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். தொழுகையை நிலைநாட்டுகின்றனர். நாம் அவர்களுக்கு வழங்கிய-வற்றிலிருந்து அவர்கள் செலவு செய்கின்றனர். (2:4) இதில், உண்மையில் இறுதியில் வெற்றி பெற இருக்கின்ற இறையச்சமுள்ளவர்களது இரண்டு அடிப்படையான அடையாளங்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த அடையாளங்கள் மூலம் அவர்கள் நன்றாக அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர். மேலும், இந்த இரண்டு வழிகள் மூலமாகவே மனிதன் இறையச்சத்தின் வழிகளில் அடியெடுத்து வைத்தவாறு இறுதியில் தனது வாழ்வின் நோக்கத்தை அடைவதில் வெற்றி பெற்று விடுகின்றான். மேலும், இறைவனது அன்பையும் நெருக்கத்தையும் அவன் பெற்றுக் கொள்கின்றான்.

இந்த வசனத்தில் அல்லாஹ் இறையச்சத்தைத் தேடுகின்ற மற்றும் இறையச்சத்தின் எல்லையற்ற வழிகளில் நடந்து செல்கின்றவரின் ஓர் அடையாளமாக இதைக் கூறுகின்றான். அதாவது, அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொள்ளும் நிலையிலேயே கழிகின்றது. இது பற்றிய கருத்து அவருக்கு முற்றிலும் பொருந்துகிறது. அவர் எதை பெற்றிருந்தாலும் முழுக்க முழுக்க இறைவனின் அருளால்தான் அதை பெற்றார் என்ற உண்மையைப் பற்றி அவர் நன்றாக அறிந்திருக்கின்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறை ஞானமிக்க இந்தக் கருத்தை தமது கவிதையில் எவ்வாறு அழகாக எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

“எல்லாம் நீ வழங்கிய கொடையேயாகும். வீட்டிலிருந்து நாங்கள் எதையும் கொண்டு வரவில்லை.” இந்த உறுதியில் முழுமையாக நிலைநின்ற பிறகு, ஒரு நம்பிக்கை கொண்ட அடியாரின் முழு வாழ்நாளும் எவ்வாறு கழிகின்றது என்றால், அவர் தனது ஒவ்வொரு பொருளையும் இறைவன் வழங்கிய கொடை என்று உறுதியாக நம்பியவாறு முழுமையான மகிழ்ச்சியுடனும் உளப்பூர்வமாகவும் திறந்த உள்ளத்துடனும் முழுமையான நிச்சய உறுதியுடனும் அவர் இறைவனின் வழியில் செலவு செய்கின்றார்; செலவு செய்து கொண்டே செல்கின்றார். தனது உயிர், பொருள், நேரம், கண்ணியம் மற்றும் இறைவனால் அவருக்கு வழங்கப்பட்ட ஆற்றல்கள் மற்றும் தகுதிகளின் ஒவ்வோர் அணுவையும் அவனது வழியில் அவர் தியாகம் செய்து கொண்டே செல்கின்றார். எல்லாவற்றையும் தியாகம் செய்த பிறகு அவரது உள்ளத்தின் ஆழத்திலிருந்து இந்த குரல்தான் எழும்.

جان دی دی ہوئی اسی کی تھی حق تو یہ ہے کہ حق ادا نہ ہوا

பொருள்: உயிரையே அவன் வழியில் அர்ப்பணித்தாலும் அந்த உயிரும் கூட இறைவன் வழங்கியதாகும். அவனுக்குரிய உரிமையை நாம் செலுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

ஸய்யிது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் கருத்தை மிகவும் இறை ஞானத்தின் வடிவில் இவ்வாறு எடுத்து கூறுகின்றார்கள்:

خدا سے وہی لوگ کرتے ہیں پیار جو سب کچھ ہی کرتے ہیں اس پہ نثار
اسی فکر میں رہتے ہیں روز و شب کہ راضی وہ دلدار ہوتا ہے کب
اسے دے چکے مال و جاں بار بار ابھی خوف دل میں کہ ہیں نابکار

பொருள்: அந்த இறைவனுக்காக அனைத்தை-யும் அர்ப்பணித்து விடுபவர்களே அவன் மீது அன்பு கொள்கின்றனர். தங்களது உள்ளம் கவர்ந்த அந்த இறைவன் எப்போது தங்களிடம் திருப்தி அடையப் போகின்றான் என்ற கவலையிலேயே அவர்களது இரவும் பகலும் இருக்கின்றன. அவர்கள் அவனிடம் தனது செல்வத்தையும் உயிரையும் மீண்டும் மீண்டும் தந்து விட்டனர். ஆனால், இப்போதும் நாம் ஒன்றும் செய்யாதவர்களாக இருக்கின்றோமே என்ற அச்சம்தான் அவர்களின் உள்ளத்தில் இருக்கின்றது.

மார்க்கத் தேவைகளுக்காக இறைவனின் வழியில் தங்களது பொருள்களைச் செலவு செய்வதன் கருத்து திருக்குர்ஆனின் மிகவும் அதிகமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் மீண்டும் மீண்டும் இதைப்பற்றி வலியுறுத்திக் கூறியுள்ளான். மேலும், மறைவான-வற்றை அறிந்துள்ள இறைவன் உங்களது பொருள் தியாகத்தை நன்றாக பார்க்கக் கூடியவனாகவும் அதைப் பற்றி நன்கு அறிந்தவன் ஆகவும் இருக்கின்றான் என்ற இந்த வாக்குறுதியை அவனே வழங்கியுள்ளான். அவன் ‘வஹ்ஹாப்’ ஆக அதாவது தாராளமாக வழங்குகின்ற இறைவனாக இருக்கின்றான். அவன் இந்த நன்மைக்கான கூலியை எண்ணி எண்ணி வழங்காமல் கணக்கில்லாமல் அவருக்கு வழங்குகின்றான். மேலும், தான் விரும்புபவருக்கு தனது நற்கூலியை எல்லையின்றி அதிகமாக்கிக் கொண்டே செல்கின்றான்.

அல்லாஹ் அவனது வழியில் பொருள் தியாகம் செய்வதை ‘ஜிஹாது’ என்று குறிப்பிடுகின்றான். மேலும், அதை ஒரு வியாபாரம் என்று கூறியவாறு அதைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا هَلْ أَدُلُّكُمْ عَلَىٰ تِجَارَةٍ تُنجِيكُم مِّنْ عَذَابٍ أَلِيمٍ - تُؤْمِنُونَ بِاللَّهِ وَرَسُولِهِ وَتُجَاهِدُونَ فِي سَبِيلِ اللَّهِ بِأَمْوَالِكُمْ وَأَنفُسِكُمْ ط ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ إِن كُنتُمْ تَعْلَمُونَ - يَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَيُدْخِلْكُمْ جَنَّاتٍ تَجْرِي مِن تَحْتِهَا الْأَنْهَارُ وَمَسَاكِنَ طَيِّبَةً فِي جَنَّاتِ عَدْنٍ ط ذَٰلِكَ الْفَوْزُ الْعَظِيمُ - وَأُخْرَىٰ تُحِبُّونَهَا نَصْرٌ مِّنَ اللَّهِ وَفَتْحٌ قَرِيبٌ ط وَبَشِّرِ الْمُؤْمِنِينَ.

நம்பிக்கை கொண்டவர்களே! வேதனை அளிக்கக்கூடிய தண்டனையிலிருந்து உங்களைக் காப்பாற்றும் வாணிபம் ஒன்றைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? நீங்கள் அல்லாஹ்விடத்தும் அவனது தூதரிடத்தும் நம்பிக்கை கொண்டு உங்கள் பொருள்களையும் உங்கள் உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் வழியில் கடுமையாக உழைப்பதாகும். நீங்கள் அறிந்திருப்பின் உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.

(நீங்கள் அவ்வாறு செய்தால்) அவன் உங்கள் பாவங்களை மன்னித்து தோட்டங்களில் நுழையச் செய்வான். அவற்றையொட்டி ஆறுகள் ஓடுகின்றன. மேலும், என்றென்றும் நிலைத்திருக்கும் தோட்டங்களிலுள்ள தூய்மையானதும் இன்பமானதுமான இருப்பிடங்களில் (அவன் உங்களை அமர்த்துவான்). இது (அவன் உங்களுக்கு அளிக்கும்) மாபெரும் வெற்றியாகும்.

நீங்கள் விரும்புகின்ற இன்னொன்றையும் (அவன் உங்களுக்கு வழங்குவான்) அது அல்லாஹ்விடமிருந்துள்ள உதவியும் அண்மையில் கிடைக்கக் கூடிய வெற்றியும் ஆகும். எனவே, நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக. (61:11-13)

இந்த வசனங்களில் அல்லாஹ் இறைவனின் வழியில் செலவு செய்வதன் அருள்களை சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளான். உலகில் கிடைக்கின்ற வெகுமதிகளே இறைவனின் உதவி மற்றும் வெற்றிகள் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும், மறுமையில் வேதனை அளிக்கக்கூடிய தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுவது, பாவங்கள் மன்னிக்கப்படுவது, அல்லாஹ்வின் திருப்தியின் நிரந்தரமான சுவர்க்கங்களில் நுழைவது ஆகியவற்றைப் பற்றிய நற்செய்தியும் வழங்கப்பட்டிருக்கின்றது. பொருள் தியாகத்தின் மூலமாக அல்லாஹ்வின் இந்த எல்லா அருள்களும் அல்லாஹ்வின் வழியில் அறப்போர் செய்கின்றவருக்கு கிடைக்கின்றன. அவரது மடி உலகம் மற்றும் மறுமையில் கிடைக்கின்ற இந்த அருள்களால் எப்போதும் நிறைந்திருக்கின்றது.

இதே கருத்து திருக்குர்ஆனின் இன்னொரு வசனத்தில் கூட இருக்கின்றது. அதில், அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ اللَّهَ اشْتَرَىٰ مِنَ الْمُؤْمِنِينَ أَنفُسَهُمْ وَأَمْوَالَهُم بِأَنَّ لَهُمُ الْجَنَّةَ

நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு சுவர்க்கம் அளிப்பதற்கு ஈடாக அல்லாஹ் அவர்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும் அவர்களின் பொருள்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டான். (9:11)

எந்த மனிதனுக்கு உண்மையான வாக்குறுதியை வழங்குகின்ற இறைவனிடமிருந்து அவன் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே சுவர்க்கத்திற்கான நற்செய்தி கிடைத்து விடுகின்றதோ அவர் உறுதியாக தனது இலக்கை அடைந்து விட்டார். இந்த வசனத்தின் இறுதிப் பகுதியில் அல்லாஹ் பொருள் தியாகங்கள் செய்கின்ற மக்களைப் பார்த்து தங்களது வேர்வையை இரத்தமாக்கி

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*


குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com


**திருக்குர்ஆனிலிருந்து...**

**நெருங்கிய உறவினர், ஏழை, வழிப்போக்கர் ஆகியவர்களுக்குரியதைக் கொடுத்து விடுவீராக. மேலும், எவ்வகையிலும் வீண் விரயம் செய்யாதீர். [17:27]**

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*அல்லாஹ்வுக்கு தனது செல்வத்திலிருந்து ஒரு நல்ல பகுதியைப் பிரித்துக் கொடுப்பவர் எவர்? அதன் காரணமாக அவர் அதனை அவருக்குப் பெருமளவில் பன்மடங்காகப் பெருக்குவான்..... (2:246)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் தர்மங்களை வெளிப்படையாகச் செய்தால் அது(வும்) மிகச் சிறந்ததேயாகும். நீங்கள் அவற்றை மறைவாக ஏழைகளுக்கு வழங்கினால் அது உங்களுக்கு மிக்க நன்றேயாகும். (இதனால்) அவன் உங்களுடைய (பல) தீமைகளை உங்களை விட்டும் நீக்கி விடுவான்.... (2:272)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*அல்லாஹ்வின் பாதையில் (பொருளையும் உயிரையும்) செலவு செய்யுங்கள். நீங்கள் உங்கள் கைகளாலேயே (உங்களை) அழிவிற்காளாக்கிக் கொள்ளாதீர்கள். மேலும் நன்மை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயமாக நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (2:196)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அல்லாஹ்வின் அருள்களை எண்ணத் தொடங்கினால் அவற்றை உங்களால் (ஒருபோதும்) கணக்கிட முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (16:19)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும், அவர்கள் அல்லாஹ்வையன்றி எவர்களை அழைக்கின்றனரோ அவர்களால் (பொய்க் கடவுளரால்) எதனையும் படைக்க முடியாது. மேலும் அவர்களே (இறைவனால்) படைக்கப்பட்டவர்கள். (16:21)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*தருமச் செயல்களையோ நற்காரியங்களையோ மக்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதையோ கொண்டு ஏவுகின்றவர்க(ளின் ஆலோசனை)களைத் தவிர்த்து, அவர்களின் ஆலோசனைகளுள் பெரும்பாலானவற்றில் எந்த நன்மையுமி(ருப்பதி)ல்லை.... (4:115)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நேர்மையிலும் இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். [5:3]**

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும்போது அளவை முழுமையாகக் கொடுங்கள். மேலும் (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) நேரான தராசு கொண்டு (சரியாக) நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள். (22:31)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் ஆணவங் கொண்டு நடக்காதீர். ஏனென்றால் இதனால் நாட்டின் எல்லையையும் உம்மால் அடைந்து விட முடியாது. மேலும் (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

முழு உலகிலுள்ளவர்களை விடவும் சிறப்பிற்குரிய முதன்மை நிலையில் இருக்கின்ற ரஸூல்மார்களின் இருப்பானது நிழலான முறையில் என்றென்றும் கியாமத் வரை நிலைத்திருக்க வேண்டும் என்று இறைவன் நாடியுள்ளான். இதற்காகவே இறைவன் கிலாஃபத்தை ஏற்படுத்தியுள்ளான். (ஷஹாதத்துல் குர்ஆன் ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 353)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறந்தவரை உயிரூட்டுவது என்பதன் தத்துவமாவது, இறைவன் முன்னிலையில் துஆ செய்து ஓர் உயிரை திரும்ப வரவழைப்பதாகும். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 114-115 பிரசுரம் 22 மார்ச் 1886)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

கிளையே! நீ பசுமையாக இருக்கின்றாய் என்பதைக் கூட நான் ஏற்றுக் கொள்கின்றேன். நீ மலர்கின்றாய்; பூக்களைத் தருகின்றாய் என்பயும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், வேரை விட்டு நீ தனியாக சென்று விடாதே! இதனால் நீ காய்ந்துபோய் விடுவாய். எல்லா அருள்களில் இருந்தும் விலக்கி வைக்கப்பட்டதாக நீ ஆகி விடுவாய். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 68-69)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

மனிதன் உண்மையான முறையில் இறைவனிடம் அன்பு செலுத்தும் போது இறைவனும் அவனிடம் அன்பு செலுத்துகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயீன் தொகுதி 22 பக்கம் 65-67)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) கண், காது, மனம் இவையெல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் சமாதானத்திற்கு இணங்கினால் (தூதரே) நீரும் சமாதானத்திற்கு இணங்குவீராக. அல்லாஹ்விடமே நீர் நம்பிக்கை வைப்பீராக. நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை) மிகக் கேட்பவனும் நன்று அறிபவனுமாவான். (8:62)

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். (அல் வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 305-306)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவனின் அருளாலும் உபகாரத்தாலும் பரக்கத்தாலும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் அருளாலும் இந்த எளியவனின் துஆவை இறைவன் ஏற்றுக் கொண்டு ஓர் அருளுக்குரிய ரூஹை அனுப்புவதாக வாக்களித்தான். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 114-115 பிரசுரம் 22 மார்ச் 1886)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

விண்ணிலிருந்து நியமிக்கப்பட்டு ஒரு நபி அல்லது தூதர் வரும்போது அந்த நபியின் அருளால் பொதுவாக ஓர் ஒளி ஒவ்வொருவரது ஆற்றல்களின் தகுதிகளுக்கேற்ப விண்ணிலிருந்து இறங்குகின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 68-69)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவதும், அவர்கள் மீது நேசம் கொள்வதும் இறுதியில் மனிதனை இறைவனுக்குப் பிரியமானவனாக ஆக்கி விடுகின்றது. (ஹகீகதுல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 65-67)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**நீங்கள் சாட்சியத்தை ஒருபோதும் மறைக்கக் கூடாது. அதை மறைப்பவரின் உள்ளம் நிச்சயமாக பாவத்திற்குள்ளாகிறது. (2:284)**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**இறைவன் ஒவ்வோர் இடத்திலும் தனது வாக்குறுதிக்கேற்ப என்னை எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாத்தான்.**

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எனக்கு ஆதரவாக அவன் எத்தகைய அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான் என்றால், இன்றைய நாளான 1906 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதி வரை அவற்றை ஒவ்வொன்றாக நான் எண்ணத் தொடங்கினால் அவை மூன்று இலட்சத்தையும் விட அதிகமாக இருக்கும் என்பதை இறைவன் மீது ஆணையிட்டு என்னால் கூற முடியும். (ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 70-72)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கொடுங்கோல் அரசர்களுடன் தொடர்புபடுத்தி கலீஃபா என்ற சொல்லைக் கூற விரும்பவில்லை. ஏனென்றால், கலீஃபா உண்மையில் ரஸூலின் நிழலாக இருக்கின்றார். (ஷஹாதத்துல் குர்ஆன் ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 353)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதர் அனுப்பப்படுவதன் மூலம் வசந்த காலம் வருகின்றது.... இந்த எல்லா அருள்களுக்கும் உண்மையில் அந்த தூதர் தான் காரணமாகத் திகழ்கின்றார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 68-69)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்றனரோ, சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவ-தில்லை. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 68-69)

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 19 October 2017 Issue No. 42

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

எழுதியுள்ளேன். இறைவன் எனக்கு இவ்வாறு தெரிவித்துள்ளான். அதாவது, ரமலானில் நடைபெற்ற சூரிய சந்திர கிரகணங்கள் வரக்கூடிய தண்டனையின் ஒரு முன்னோடியாக இருக்கின்றது. இந்த முன்னறிவிப்பிற்கு ஏற்ப நாட்டில் எந்த அளவு பிளேக் பரவியது என்றால் இதுவரை பிளேக்கினால் ஏறக்குறைய மூன்று இலட்சம் பேர் மரணித்து விட்டனர்.

**எழுபத்தி ஆறாவது அடையாளம்:** பராஹீனே அஹ்மதிய்யாவில் என்னைப் பற்றிய இறைவனின் இந்த முன்னறிவிப்பு இடம் பெற்றிருக்கின்றது. اَلْقَيْتُ عَلَيْكَ مَحَبَّةً مِّنِّيْ وَلِتُصْنَعَ عَلٰى عَيْنِيْ அதாவது, நான் உன் மீதுள்ள நேசத்தை மக்களது உள்ளங்களில் இடுவேன். நான் எனது கண்களுக்கு முன்னால் உம்மை வளர்ச்சியடையச் செய்வேன் என்று இறைவன் கூறுகின்றான். இது, ஒரு நபர் கூட என்னுடன் தொடர்பு வைக்காமல் இருந்த அந்த நேரத்தில் எனக்கு வந்த இல்ஹாமாகும். பிறகு, ஒரு காலம் கழிந்த பிறகு இந்த இல்ஹாம் நிறைவேறியது. மேலும், அத்தகைய ஆயிரக்கணக்கான மனிதர்களை இறைவன் உருவாக்கியுள்ளான். அவர்களது உள்ளங்களில் அவன் எனது நேசத்தை நிறைத்து விட்டான். அவர்களில் சிலர், எனக்காக உயிரைத் தந்து விட்டனர். அவர்களில் சிலர், தங்கள் பொருள் அழிந்து போவதை எனக்காக ஏற்றுக் கொண்டனர். அவர்களில் சிலர், எனக்காக தங்கள் நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள் துக்கங்களுக்கும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். மேலும், அத்தகைய ஆயிரக்கணக்கான மக்களும் இருக்கின்றனர். அவர்கள், தங்கள் தேவைகளுக்கு எதிரில் எனக்கு முன்னுரிமை வழங்கியவாறு தங்களது பிரியமான செல்வத்தை எனக்கு முன்னால் வைத்து விட்டனர்.☆ அவர்களது உள்ளம் அன்பால் நிறைந்திருப்பதை நான் பார்க்கின்றேன். அவர்கள் தங்களது செல்வத்தை விட்டு விட்டு முற்றிலுமாக அதிலிருந்து விலகி நிற்க வேண்டும் அல்லது தங்களது உயிர்களை எனக்காக அர்ப்பணித்துவிட வேண்டும் என்று நான் கூறினால் அதை செய்ய அவர்கள் ஆயத்தமாக உள்ளனர். நான் எனது ஜமாஅத்திலுள்ள பெரும்பாலான நபர்களிடத்தில் இந்த தகுதியிலுள்ள உண்மையையும் பற்றையும் காண்கின்றபோது என்னையும் அறியாமல் எனது வல்லமையுள்ள இறைவனே ! உண்மையில் ஒவ்வோர் அணுவின் மீதும் உனது ஆதிக்கம் இருக்கின்றது. மாசுகள் நிறைந்துள்ள இத்தகைய காலத்தில் நீ இந்த உள்ளங்களை என் பக்கம் ஈர்த்துள்ளாய். அவற்றிற்கு உறுதியாக நிலைத்திருக்கும் தன்மையை வழங்கியுள்ளாய். இது உனது வல்லமையின் மகத்தான அடையாளமாகும் என்று எனக்கு கூற வேண்டியது வருகின்றது.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 238-240)*

☆ அடிக்குறிப்பு: நான் இதை எழுதிக்கொண்டிருக்கும்போது இந்த இடத்தை அடைந்து, இந்த சொற்றொடரை எழுதியதும், அப்போதே எனது இயக்கத்தில் இணைந்துள்ள கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட உண்மையாளர் ஒருவரது கடிதம் வந்தது. அந்த கடிதம் இந்த சொற்றொடரை நான் எழுதிய அதே நேரத்தில் வந்தது. பொருத்தமான ஒரு சூழ்நிலையாக அது அமைந்து விட்டது. எனவே, கீழே அந்த கடிதத்தை நான் எழுதுகின்றேன். அதிலுள்ள வரிகள் இதுவாகும்:

“இப்போது நான் இருப்பதுபோன்று மறுமை நாளில் ஹுஸூர் அவர்களின் நிழலின் கீழ் இருக்கின்ற அருளுக்குரிய ஜமாஅத்தில் இணைந்திருக்க வேண்டும் என்பது எனது உள்ளத்திலுள்ள ஆசையாகும். மேன்மை தாங்கிய ஹுஸூர் அவர்களே! அல்லாஹ் நன்கு அறிபவனாக இருக்கின்றான். இந்த எளியவனுக்கு உங்கள் மீது எந்த அளவு நேசம் இருக்கின்றது என்றால் எனது எல்லா பொருளும், உயிரும் உங்களுக்காக என்னை அர்ப்பணமாக்கட்டும். உங்கள் மீதுள்ள நேசத்திலும் உங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதிலும் எனது முடிவு அமையட்டும். ஆமீன்.

எளியவன், ஸய்யிது நாஸிர் ஷா அவர் ஸெய்ர், காஷ்மீரிலுள்ள பாராமூலா என்ற இடத்திலிருந்து 15 ஆகஸ்ட் 1906 (அன்று இக்கடிதத்தை எழுதியுள்ளேன்).

உண்மையில் இந்த கலப்பற்ற இளைஞர் மிக அதிகமாக கலப்பற்ற தன்மையைக் கொண்டவராக இருக்கின்றார். தனது அன்பின் உணர்வினால் ஏறக்குறைய 2,000/- ரூபாய் அல்லது அதை விட அதிகமாக வழங்கியுள்ளார். இந்தக் கடிதத்துடனும் (50 ரூபாய் 1 பைசா) வந்துள்ளது.

---

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஹலாலான ரிஸ்கிலிருந்து சம்பாதித்தவற்றை எனது திருப்தி கிடைப்பதற்காக தியாகம் செய்பவர்களே! நான் உங்களிடம் கூறுகின்றேன்.

فَاسْتَبْشِرُوْا بِبَيْعِكُمُ الَّذِيْ بَايَعْتُمْ بِهٖ وَذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ

நீங்கள் அந்த இறைவனுடன் செய்த வணிகம் குறித்து மகிழ்ச்சி அடையுங்கள். மேலும் இதுவே மாபெரும் வெற்றியாகும். (9:112)

ரஹ்மானும் ரஹீமுமாக இருக்கின்ற நமது இறைவன் நம்மீது எந்த அளவு பேரருள் செய்துள்ளான்? அவன்தான் நம்மைப் படைத்தான். அவனே நமக்கு வாழ்வை வழங்கினான். அவன்தான் நமக்கு பொருளை சம்பாதிப்பதற்கான ஆற்றலையும் நல்வாய்ப்பையும் வழங்கினான். பிறகு, அவனது அருளால், அவனது கருணையால் நாம் சம்பாதித்த பொருளிலிருந்து ஒரு பகுதியை அவனுக்காக நாம் தியாகம் செய்யும்போது தாராளமாக வழங்குகின்ற அந்த இறைவன் எந்த அளவு மகிழ்ச்சி அடைகின்றான் என்றால் அவன் சுவர்க்கத்திற்கான நற்செய்தியை அவனுக்கு வழங்குகின்றான். நம்பிக்கை கொண்ட ஓர் அடியானுக்கு மகத்தான வெற்றி என்று கூறப்படுகின்ற அருளை விட மேலானதாக வேறு எந்த அருள் இருக்க முடியும்?

இறை வழியில் செலவு செய்து, இந்த நல்ல பணியில் சோம்பல் மற்றும் கவனமின்மையுடன் நடந்து கொள்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் பற்றி மிகவும் வலியுறுத்தியவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اَنْفِقُوْا مِمَّا رَزَقْنٰكُمْ مِّنْ قَبْلِ اَنْ يَّاْتِيَ يَوْمٌ لَّا بَيْعٌ فِيْهِ وَلَا خُلَّةٌ
وَّلَا شَفَاعَةٌ ط وَالْكٰفِرُوْنَ هُمُ الظّٰلِمُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! எவ்வித கொடுக்கல் வாங்கலும் நட்பும் பரிந்துரையும் இல்லாத அந்நாள் வருவதற்கு முன்னர், நாம் உங்களுக்கு வழங்கியதிலிருந்து செலவு செய்யுங்கள். நிராகரிப்பவர்கள்தான் (தங்களுக்கே) அநீதியிழைப்பவர்களாவர். (2:255)

இந்த வசனத்திலுள்ள இந்த கருத்து நினைவில் கொள்ளத்தக்க -தாகும். அதாவது, இறைவழியில் செலவு செய்யாதவர்களை அல்லாஹ் அநீதியிழைப்பவர்கள் என்று கூறியுள்ளான். உண்மையிலேயே மறுமையில் கிடைக்கவிருக்கின்ற மகத்தான வெற்றிக்கு எதிரில் உலகின் தற்காலிக மகிழ்ச்சிக்கும் சுகத்திற்கும் முன்னுரிமை வழங்குபவர்கள் மிகவும் அநீதியிழைப்பவர்களாவர் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்?

*(தொடரும்.....)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad